29

# சபை எடுத்துக்கொள்ளப்படுதலும். இறுதி நாட்களும்

இயேசுவானவர் மானிட வடிவில் இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, தாம் அவர்களைவிட்டு விலகிச் சென்று, ஒரு நாள் திரும்பி வரப்போவதாக அவர் தமது சீஷர்களுக்குத் தெளிவாக அறிவித்தார். அவர் திரும்பி வரும்போது, அவர்களைத் தம்மோடு பரலோகத்துக்கு எடுத்துச் செல்லுவார் [இதை இப்போதைய கிறிஸ்தவர்கள் ''சபை எடுத்துக்கொள்ளப்படுதல்'' என்று அழைக்கிறார்கள்]. எடுத்துக் காட்டாக, தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய இரவில் அவர் தமக்கு உண்மையாக இருந்த பதினொரு அப்போஸ்தலர் களிடமும் இப்படிச் சொன்னார்:

> உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமா யிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி, *நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்* [யோவான் 14:1—3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவரின் வார்த்தைகளில் அந்தப் பதினொருவரின் வாழ்க்கை நாட்களிலும்கூட அவர் திரும்பி வரலாம் என்ற சாத்தியக் கூறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உண்மையில், இயேசுவானவர் சொல்லி யதைக் கேட்டபிறகு, அவர்கள் தங்கள் வாழ்நாட்கள் முடிவதற்குள்ளாக

அவர் திரும்பி வந்து தங்களைச் சேர்த்துக்கொள்ளுவார் என்றே யூகித்திருப்பார்கள் என்பது நிச்சயமாகும்.

அவர் தமது வருக்கைக்காக *ஆயத்தமாக* இருக்கும்படி மறுபடியும் மறுபடியுமாக எச்சரித்திருக்கிறபடியால், அவர்களுடைய வாழ்நாள் முடிவதற்குள்ளாகவே தாம் திரும்பச் சாத்தியக் கூறு இருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் [எடுத்துக்காட்டாக, பார்க்க, மத். 24:42–44].

## நிருபங்களில் இயேசுவின் சமீபமான வருகை

முதலாம் நூற்றாண்டு வாசகர்களின் வாழ்நாளுக்குள்ளாக இயேசு வானவர் திரும்பக் கூடும் என்ற நம்பிக்கையைப் புதிய ஏற்பாட்டு நிருபங்களை எழுதிய அப்போஸ்தலர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, யாக்கோபு இப்படி எழுதியிருக்கிறார்:

> இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; *கர்த்தரின் வருகை சமீபமாயிருக் கிறதே* [யாக். 5:7–8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அவர்களுடைய வாழ்நாளுக்குள்ளாக நடக்காத ஒன்றுக்காகப் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும் என்று யாக்கோபு சொல்லுவதற்குக் காரணமில்லையே. கர்த்தருடைய வருகை ‘‘சமீபமாயிருக்கிறது’’ என்று அவர் விசுவாசித்தார். யாக்கோபு இதை எழுதும்போது சபையானது அதிகமான சித்திரவதைகளை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது [பார்க்க, யாக். 1:2–4]. இது விசுவாசிகள் இயல்பாகவே தங்கள் ஆண்டவருடைய வருகைக்காக அதிகமாக எதிர்பார்த்த நேரமாக இருந்தது.

இதைப்போலவே, தனது சமகாலத்தவர் பலரின் வாழ்நாள் முடிவதற்குள்ளாக இயேசுவானவர் திரும்பிவருவார் என்று பவுல் அப்போஸ்தலனும் விசுவாசித்தார்:

> அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: *கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.* ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். *பின்பு, உயிரோடிருக் கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு*, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் [1 தெச. 4:13–18 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].[69]

இதிலிருந்து இயேசுவானவர் திரும்பி வரும்போது மரித்த விசுவாசிகளின் சரீரங்கள் உயிரோடு எழுப்பப்படும் என்றும், அவருடைய வருகையின்போது உயிரோடிருக்கும் விசுவாசிகள் ‘‘*ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு*, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட’’ இருப்பார்கள் [சபை எடுத்துக்கொள்ளப்படுதல்]. இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் பரலோகத்திலிருந்து கொண்டுவருவார் என்று பவுல் எழுதியிருக்கிறபடியால், சபை எடுத்துக்கொள்ளப்படும் போது, பரலோகத்திலிருந்து வரும் விசுவாசிகளின் ஆவிகள் புதிதாக உயிர்த்தெழுந்த தங்கள் சரீரங்களோடு சேர்ந்துகொள்ளும் என்ற முடிவுக்கு வரமுடியும்.

பேதுரு தனது முதல் நிருபத்தை எழுதியபோது, இயேசுவின் வருகை சமீபமாயிருக்கிறது என்று விசுவாசித்தார்:

> ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; *இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்... எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று*; ஆகையால் தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்...*கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக* அவருடைய

[69] தனது சமகாலத்தவரின் வாழ்க்கை முடிவதற்குள்ளாக இயேசு திரும்பி வருவார் என்று பவுல் விசுவாசித்ததைக் காட்டும் வேறு சில வசனங்கள்: பிலி. 3:20; 1 தெச. 3:13; 5:22; 2 தெச. 2:1–5; 1 தீமோ. 6:14–15; தீத்து 2:11–13; எபி. 9:28.

> பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள் [1 பேதுரு 1:13; 4:7,13 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].[70]

இறுதியாக, யோவான் சபைகளுக்குத் தனது நிருபங்களை எழுதியபோது, அவரும்கூட முடிவு சமீபமாயிற்று என்றும், அவருடைய நாட்களைச் சேர்ந்த வாசகர்கள் இயேசுவின் வருகையைக் காண்பார்கள் என்றும் விசுவாசித்தார்.

> பிள்ளைகளே, *இது கடைசிக் காலமாயிருக்கிறது*; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப் பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம்... இப்படியிருக்க, பிள்ளை களே, *அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு* அவரில் நிலைத் திருங்கள்... பிரியமானவர்களே, இப்பொழுது தேவனு டைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப் போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் *அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ண மாகவே நாம் அவரைத் தரிசிப்ப தினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக் கிறோம்.* அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத் திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான் [1 யோவான் 2:18,28; 3:2–3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

### அவர் தாமதித்தல்

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளை நாம் திரும்பிப் பார்க்கும்போது, இயேசுவானவர் அப்போஸ்தலர்கள் நம்பியபடி விரைவாகத் திரும்பிவரவில்லை என்று அறிகிறோம். அவர்களுடைய நாட்களிலும்கூட அவர் அவர்களை விட்டுச்சென்று நீண்ட காலம் ஆகிவிட்டிருந்தபடியால், அவர் திரும்பி *வருவாரா* என்று சந்தேகப் பட்டவர்களும் இருந்தார்கள். பேதுருவின் உலக வாழ்க்கை முடிவை நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் [பார்க்க, 2 பேதுரு 1:13–14], இயேசுவானவர் இன்னும் திரும்பி வராதபடியால் சந்தேகப்பட்டவர் களுக்கு அவர் தமது இறுதி நிருபத்தில் பதிலளித்திருக்கிறார்:

[70] இயேசுவானவர் தமது சமகாலத்தவரின் வாழ்நாள் முடிவதற்குள்ளாகத் திரும்பி வருவார் என்று பேதுரு விசுவாசித்ததைச் சுட்டிக்காட்டும் பிற வசனங்கள்: 2 பேதுரு 1:15–19; 3:3–15].





> முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில்: கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தை யினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் [2 பேதுரு 3:3–10].

இயேசுவானவர் தாமதிப்பதற்குக் காரணம் அவருடைய அன்பும் இரக்கமுமே என்று பேதுரு உறுதிப்படுத்தினார். மக்கள் மனந்திரும்பு வதற்காக அவர் அதிக காலத்தைக் கொடுக்க விரும்புகிறார். ஆனால் இயேசுவானவர் திரும்பி வருவதில் எந்தவித் சந்தேகமும் இல்லை என்பதையும் அவர் உறுதியாகச் சொல்லியிருக்கிறார். அவர் அப்படி வரும்போது, அதிக கோபாக்கினையோடு வருவார்.

அப்படிக் கிறிஸ்து வருவதற்கு முன்பாக, பல ஆண்டுகளாக உலகெங்கும் உபத்திரவங்கள் காணப்படும் என்றும், தீயவர்கள்மீது தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படும் என்றும் வேதவசனங்கள் தெளிவாகக் கூறகின்றன. வெளிப்படுத்தல் புத்தகத்தின் பெரும்பகுதி

இந்தக் கடைசி நாட்களைக் குறித்தே சொல்லுகிறது. நமது ஆய்வில் இனிமேல் பார்க்கப்போகிறபடி, வருங்காலத்தில் ஏழு ஆண்டுகள் மகா உபத்திரகாலம் இருக்கும். சபை எடுத்துக்கொள்ளப்படுதல் இந்தக் கால கட்டத்திலோ அல்லது இதற்கு நெருக்கமான காலத்திலோ நடைபெறும்.

### மிகச் சரியாக எப்போது சபை எடுத்துக்கொள்ளப்படும்?

சபை எடுத்துக்கொள்ளப்படுதல் எப்போது நடக்கும் என்பது குறித்துக் கிறிஸ்தவர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிலர் ஏழாண்டு உபத்திரவ காலத்துக்குச் சற்று முன்னர் சபை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். மற்றவர்கள் ஏழாண்டு கால உபத்திரவகாலத்தின் மையத்தில் சபை எடுத்துகொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். மேலும் சிலர் உபத்திரவ காலத்தின் மையத்துக்குச் சற்றே அப்பால் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் உபத்திரவ காலத்தின் இறுதியில் இயேசுவானவர் திரும்பி வரும்போது அது நடைபெறும் என்று சொல்லுகிறார்கள்.

இந்தக் காரியத்துக்காகப் பிரிந்துபோவதில் அர்த்தமில்லை. எல்லோரும் ஏழாண்டு உபத்திரவ காலத்துக்கு முன்போ அல்லது அதை ஒட்டியோ சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றில் இது ஒரு குறுகிய பகுதியாகும். எனவே நமது கருத்து வேறுபாடுகளின் காரணமாகப் பிளவுபடாமல், நாம் எதை ஒப்புக்கொள்ளுகிறோமோ அதில் களிகூருவோமாக! நாம் ஒவ்வொருவரும் எதை விசுவாசித்தாலும் அது நடக்கப்போகிற காரியத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

எனது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் இருபத்தைந்து ஆண்டுகளில் சபை எடுத்துக்கொள்ளப்படுவது ஏழாண்டு உபத்திரவ காலத்துக்கு முன்னால் நடக்கும் என்றே நான் விசுவாசித்தேன். அப்படி எனக்குப் போதித்திருந்தபடியால் நான் அப்படியே விசுவாசித்தேன். வெளிப்படுத்தலின் புத்தகத்தில் நான் என்ன வாசிக்கிறேன் என்பதைப் பற்றி நினனத்துப் பார்க்கவில்லை. என்றாலும் நான் வேதவசனங்களை ஆராயத் துவங்கியபோது வேறுவிதமான கண்ணோட்டத்தைப் பெற்றேன். எனவே நாம் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வருவோம். என்னுடைய கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நாம் ஒருவரிலொருவர் அன்பு காட்ட வேண்டும்!

### ஒலிவ மலைச் சொற்பொழிவு

மத்தேயு சுவிசேஷத்தின் 24ஆம் அதிகாரத்தைக் கொண்டு நாம் முதலில் துவங்குவோம். அது கடைசி கால நிகழ்ச்சிகளையும்





இயேசுவின் வருகையையும் குறித்த அடிப்படையான விவரங்களைக் கொண்டிருக்கிறது. மத்தேயு சுவிசேஷத்தின் 25ஆம் அதிகாரத்தோடு சேர்ந்து இவை *ஒலிவமலைச் சொற்பொழிவு* என்று அழைக்கப் படுகின்றன. ஏனென்றால் இந்த இரண்டு அதிகாரங்களிலும் இயேசு வானவர் ஒலிவ மலையில் வைத்துத் தமக்கு நெருக்கமான சீஷர்களுக் குக் [71] கொடுத்த சொற்பொழிவு அடங்கியுள்ளது. நாம் இதை வாசிக்கும் போது, கடைசி காலத்தில் நிகழப்போகும் பல நிகழ்ச்சிகளைக் குறித்து அறிந்துகொள்ளுவோம். இயேசுவானவரின் இந்தச் சொற்பொழிவைக் கேட்ட சீஷர்கள் எப்போது சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதுகுறித்து எந்த முடிவுக்கு வந்திருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்.

> இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இவை களையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள் [மத்.24:1–3].

வருங்காலத்தைக் குறித்து அறிந்துகொள்ள இயேசுவின் சீஷர்கள் விரும்பினார்கள். குறிப்பாக எப்போது ஆலயத்தின் கட்டிடங்கள் அழிக்கப்படும் [இயேசுவானவர் அப்போதுதான் அவைகளின் அழிவைக் குறித்து முன்னறிவித்திருந்தார்], அவருடைய வருகைக்கும் காலத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன என்று அறிந்துகொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, ஆலயக் கட்டிடங்கள் கி.பி. 70இல் தளபதி டைட்டசினாலும் அவனுடைய படையினாலும் முழுவதுமாக அழிக்கப்பட்டன என்பதை அறிகிறோம். என்றாலும் இயேசுவானவர் தமது சபையை எடுத்துக்கொள்ள இன்னும் வரவில்லை

[71] மாற்கு 13:3 வசனத்தில் கூடியிருந்த நான்கு பேர்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன: பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா. ஒளிவ மலைச் சொற்பொழிவை நாம் மாற்கு 13:1–37 மற்றும் லூக்கா 21:5–36 வசனங்கலிலும் காணப்படுகிறது. லூக்கா 17:22–37 வசனங்களிலும் இதே விவரம் காணப்படுகிறது.

என்பதையும் அறிந்திருக்கிறோம். எனவே இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஒன்றாக நடப்பவை அல்ல.

### இயேசுவானவர் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்

ஆலயக்கட்டிடங்கள் அழிக்கப்படுவதுகுறித்த கேள்விக்கு இயேசுவானவர் கொடுத்த பதிலை மத்தேயு கொடுக்கவில்லை. ஆனால் லூக்கா தனது சுவிசேஷத்தில் அதைக் கொடுத்திருக்கிறார் [பார்க்க, லூக்கா 21:12–24]. மத்தேயு சுவிசேஷத்தில் இயேசுவானவர் உடனடியாகத் தமது வருகை மற்றும் கடைசி காலத்திற்கு முன்வரும் அடையாளங்களைக்குறித்துப் பேசத் துவங்குகிறார்:

> இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தத்தின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் [மத். 24:4–8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்தப் பிரசங்கத்தின் துவக்கத்திலிருந்தே தமது முதல் நூற்றாண்டுச் சீஷர்கள் தமது வருககைக்கு முன்வரும் இந்த நிகழ்ச்சிகளின்போது உயிரோடு இருப்பார்கள் என்று இயேசு நம்பிக்கை வைத்திருந்தார் என்பது தெரிகிறது. *நீங்கள், உங்களை* என்ற தனிப்பட்ட மறுபெயர்ச்சொல்லை இயேசுவானவர் பயன்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். 24ஆம் அதிகாரத்தில் மட்டும் இயேசுவானவர் குறைந்தபட்சம் இருபது முறை இவ்வாறு பயன்படுத்தியிருக்கிறார். எனவே அவருடைய பேச்சுக்குச் செவிகொடுத்தவர்கள் தாங்கள் அந்த நிகழ்ச்சிகளைக் காண்போம் என்றே விசுவாசித்திருக்க வேண்டும்.

அன்று இயேசுவானவருக்குச் செவிகொடுத்த ஒவ்வொரு சீஷரும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் மரித்துப்போய்விட்டார்கள் என்பதை நாம் அறிவோம். என்றாலும், இயேசுவானவர் அவர்களை ஏமாற்றிவிட்டார் என்ற முடிவுக்கு நாம் வரக் கூடாது. ஏனென்றால் அவர்தாமே தமது வருகையின் சரியான நேரத்தை அறியாதிருந்தார்





[பார்க்க, மத். 24:36]. அப்போது அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் அவருடைய வருகையின் வரையில் இருக்கக்கூடிய சாத்தியக் கூறு இருந்தது.

தமது சீஷர்கள் கள்ளக் கிறிஸ்துக்களினால் ஏமாற்றப்படக் கூடாது என்பதைக் குறித்தே இயேசுவானவர் அதிகக் கரிசனை கொண்டிருந்தார். ஏனென்றால் கடைசி நாட்களில் பலர் அப்படி ஏமாற்றப்படுவார்கள். அந்திக்கிறிஸ்துவும் ஒரு கள்ளக் கிறிஸ்துவாக உலகத்தில் பெரும்பாலானவர்களை ஏமாற்றுவான் என்பதை நாம் அறிவோம். அவர்கள் அவனை ஒரு அற்புதமான இரட்சகராகக் கருதுவார்கள்.

யுத்தங்களும், பஞ்சங்களும், பூமியதிர்ச்சிகளும் உண்டாகியிருக்கும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் தமது வருகைக்கான அடையாளங்கள் *அல்ல*, ''வேதனைகளுக்கு ஆரம்பம்'' என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்த அடையாளங்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகவே நடந்துகொண்டிருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால் அடுத்து இயேசு சொன்ன காரியம் இன்னும் நடக்கவில்லை.

### உலகளாவிய உபத்திரவம் துவங்குகிறது

> அப்பொழுது, *உங்களை* உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, *உங்களைக்* கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் *நீங்கள்* சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் [மத். 24:9–14 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அன்று இயேசுவானவரின் பேச்சை நேரில் கேட்டவர்களிடம் நீங்கள் ''இந்தக் காரியங்கள் நிகழுவதைக் காணும்படி நீங்கள் உயிரோடிருப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறீர்களா?'' என்று கேட்டிருப்பீர்களானால், அவர்கள் ஆமாம் என்றுதான் பதில் சொல்லியிருப்பார்கள். இயேசுவானவர் *நீங்கள் உங்கள்* என்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்.

நாம் இப்போது வாசித்தபடி ''வேதனைகளுக்கு ஆரம்பத்துக்குப்'' பிறகு நடந்த நிகழ்ச்சி இன்னும் நடக்கவில்லை. அப்போது

உலகளாவிய வகையில் கிறிஸ்தவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காத வகையில் கடுமையாகத் துன்புறுத்தப்படுவார்கள். நாம் ''சகல ஜனங்களாலும்'' பகைக்கப்படுவோம். அதாவது, ''எல்லா இனக் குழுக்களாலும் பழங்குடிகளாலும்'' பகைக்கப்படுவோம். இயேசுவானவர் நூற்றுக்கணக்கான ஆண்டுகளைக் கொண்ட ஒரு பொதுவான காலத்தை அல்ல, ஒரு திட்டவட்டமான காலத்தைக் குறிப்பிடுகிறார். ஏனென்றால் அடுத்த வாக்கியத்திலேயே அவர் ''*அப்பொழுது*, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்'' என்று சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்தவ விசுவாசிகள் ''இடறலடைவதைப் பற்றி'' அவர் குறிப்பிட்டிருக்கிறார், பிறகு அவர்கள் மற்ற விசவாசிகளைப் பகைப்பார்கள். ஏனென்றால் அவிசுவாசிகள் ''இடறலடைய'' முடியாது, அவர்கள் ஏற்கெனவே ஒருவரையொருவர் பகைக்கிறார்கள். இப்படியாக உபத்திரவ காலம் துவங்கும்போது, கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக அறிக்கையிடும் பலர் வெளியரங்கமாக்கப்படுவார்கள். அவர்கள் மெய்யான அல்லது பொய்யான விசுவாசிகளாக இருந்தாலும், வெள்ளாடாகவோ அல்லது செம்மறியாடாகவோ இருந்தாலும், பலர் இடறலடைவார்கள். அவர்கள் துன்புறுத்தும் அதிகாரிகளிடம் விசுவாசிகள் யார் என்பதைக் காட்டிக்கொடுப்பார்கள். தாங்கள் முன்பு அன்பு காட்டியவர்களை இப்போது வெறுப்பார்கள். இதன் மூலமாக உலகெங்கிலுமுள்ள சபை சுத்திகரிக்கப்படும்.

கள்ளத் தீர்க்கதரிசகள் பலரும் எழும்புவார்கள். அவர்களில் ஒருவன் அந்திக் கிறிஸ்துவுக்கு உதவிசெய்கிறவனாக வெளிப்படுத்தல் நூலில் சித்திரிக்கப்பட்டிருக்கிறான் (பார்க்க, வெளி. 13:11–18; 19:20; 20:10). மக்களின் இருதங்களில் கொஞ்சம் எஞ்சியிருக்கும் அன்பும் அழிக்கப்படும்படி எங்கும் அக்கிரமம் அதிகமாகும். பாவிகள் முழுவதுமாக இருதயமற்றவர்களாகக் காணப்படுவார்கள்.

## இரத்தச்சாட்சிகளும் பிழைத்திருப்பவர்களும்

விசுவாசிகள் தங்கள் உயிரை இழந்துபோவார்கள் என்று இயேசுவானவர் சொன்னாலும் (பார்க்க, 24:9) எல்லோரும் அப்படிக் கொல்லப்பட மாட்டார்கள். ஏனென்றால் முடிவுவரையில் நிலைநிற்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார் (பார்க்க, 24:13). அதாவது, அவர்கள் கள்ளக் கிறிஸ்துக்களாலும், கள்ளத் தீர்க்கதரிசிகளாலும் ஏமாற்றப்படாமல் தங்களைக் காத்துக்கொண்டு, தங்கள் விசுவாசத்தைவிட்டு விலகும் படியான சோதனையில் ஜெயிப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் அல்லது அவர்களைச் சேகரிக்கும்படி கிறிஸ்து மத்திய ஆகாயத்துக்கு வரும்போது அவரால் காப்பாற்றப்படுவார்கள். இந்த உபத்திரவம் மற்றும்





காப்பாற்றப்படுதல் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது:

> யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப் படுவார்கள் (தானி. 12:10).

சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் (''இனக்குழுக்கள் மற்றும் பழங்குடிகளுக்கும்'') அறிவிக்கப்படும் என்று இயேசுவானவர் வாக்குத்தத்தமாக அறிவித்திருக்கிறபடியால், இந்த நாட்களிலும்கூட இரட்சிப்பு கிருபையாக அருளப்படும். மனந்திரும்புதலுக்கான இறுதி வாய்ப்பு கொடுக்கப்படும். பிறகு முடிவு வரும்.[72] இயேசுவின் வாக்குத்தத்தம் நிறைவேறுவதை நாம் வெளிப்படுத்தல் நூலில் பார்க்கிறோம்.

> பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் *அறிவிக்கத் தக்கதாக நித்திய சுவிசேஷத்தை* உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; *அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது*; வானத்தையும் பூமி யையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான் (வெளி. 14:6–7 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

ஒரு தூதன் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான காரணம் ஏழாண்டு உபத்திரவகாலத்தின் இந்தக் கட்டத்துக்குள்ளாகச் சபை எடுத்துக் கொள்ளப்படுவதால் விசுவாசிகள் எல்லோரும் எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இது வெறும் யூகம் மட்டுமேயாகும்.

## அந்திக்கிறிஸ்து

ஏழாண்டு உபத்திரவ காலத்தின் மத்தியில் எருசலேமில் மறுபடியுமாகக் கட்டப்பட்ட ஆலயத்தில் அந்திக் கிறிஸ்து அமர்ந்து,

[72] இந்த வாக்குத்தத்தத்தை அதன் பின்னணியிலிருந்து வெளியே எடுத்து, இயேசுவாவரின் வருகைக்கு முன்பாக நாம் நற்செய்தி ஊழியத்தை முடிக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால் பின்னணியோடு இதைப் பார்க்கும்போது, உலகம் அழிவதற்கு முன்பாக சுவிசேஷம் முழு உலகத்துக்கும் அறிவிக்கப்படுவதைக் குறித்து இது கூறுகிறது.

தானே தேவன் என்று பிரகடனம் செய்துகொள்ளுவான் என்று தானியேல் தீர்க்கதரிசி வெளிப்படுத்தியிருக்கிறார் [பார்க்க, தானி. 9:27, இதைக் குறித்து நாம் பின்னர் ஆய்வுசெய்வோம்]. இயேசுவானவர் தமது ஒலிவ மலைச் சொற்பொழிவைத் தொடர்ந்தபோது இந்த நிகழ்ச்சியையே அவர் கருத்தில் கொண்டிருந்தார்:

மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,

> யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன். அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ. நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.[73] அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும் [மத். 24:15–22].

இது இயேசுவானவர் ஏற்கெனவே குறிப்பிட்ட உபத்திரவ காலத்தைக் குறித்த [பார்க்க, 24:9] கூடுதலான விளக்கமாகும். எருசலேம் ஆலயத்திலிருந்து அந்திக்கிறிஸ்து தானே தேவன் என்று அறிவிக்கும்போது, இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்குக் கற்பனை செய்ய முடியாத உபத்திரவம் உண்டாயிருக்கும். தானே தேவன் என்று அறிவித்திருக்கிறபடியால், எல்லோரும் தனது தெய்வத்துவத்தை அங்கிகரிக்க வேண்டும் என்று அந்திக் கிறிஸ்து எதிர்பார்ப்பான். இதன் காரணமாகக் கிறிஸ்துவை மெய்யாகவே பின்பற்றும் எல்லோரும் உடனடியாக ஆளுகைக்கு எதிரான விரோதிகளாக ஆகிவிடுவார்கள். அவர்கள் தேடிக் கொல்லப்படுவார்கள்.

[73] சிலர் கூறுவதுபோல ஏழாண்டு உபத்திரவகாலத்தின் இந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் சபை எடுத்துக்கொள்ளப்படுமானால், விசுவாசிகள் தங்கள் உயிர் தப்ப ஓடி ஒளிய வேண்டும் என்று இயேசுவானவர் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது, ஏனென்றால் அவர்கள் எடுக்கப்பட்டிருப்பார்கள்.





எனவேதான் யூதேயாவிலுள்ள விசுவாசிகள் தங்களுக்குத் தடை எதுவும் வரக்கூடாது என்று வேண்டிக்கொண்டு மலைகளை நோக்கி ஓட வேண்டியிருக்கும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சி நடக்கும்போது உலகெங்கிலுமுள்ள விசுவாசிகள் தொலைவான இடங்களுக்கு ஓடிச் செல்லுவதே நலமாக இருக்கும் என்று நான் யூகிக்கிறேன். ஏனென்றால் இது உலகம் முழுவதும் தொலைக்காட்சியில் காட்டப்படலாம் என்று நான் நினைக்கிறேன். முழு உலகமும் அந்திக்கிறிஸ்துவினால் ஏமாற்றப்படும் என்று வேதவசனம் கூறுகிறது. அவனே கிறிஸ்து என்று அவர்கள் நினைப்பார்கள். அவனுக்குத் தங்கள் பற்றுறுதியைக் காட்டுவார்கள். அவன் தானே தேவன் என்று அறிவிக்கும்போது, அவர்கள் அவனை விசுவாசித்து, அவனை ஆராதிப்பார்கள். அவன் மெய்யான தேவனுக்கு – கிறிஸ்தவர்களின் தேவனுக்கு – எதிராக தூஷணம் சொல்லும்போது, தன்னை ஆராதிக்க மறுப்பவர்களை முழு உலகத்தாரும் வெறுக்கும்படி அவன் செய்வான் [பார்க்க, வெளி. 13:1–8].

இந்த உபத்திரவ நாட்களைக் ''குறைப்பதின் மூலமாக'' தமது மக்களை இறுதியாக விடுவிப்பதாக இயேசுவானவர் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார். இல்லாவிட்டால் ''ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை'' [24:22]. ''தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக'' இந்த நாட்கள் ''குறைக்கப்படுவது'' என்பது அவர் அவர்களை நடுவானத்தில் வந்து சேர்த்துக்கொண்டு விடுவிப்பதைக் குறிக்க வேண்டும். என்றாலும், அந்திக் கிறிஸ்து தன்னைத் தேவன் என்று அறிவித்து எவ்வளவு காலம் கழித்து இது நடக்கும் என்பதை இயேசுவானவர் குறிப்பிடவில்லை.

எப்படியிருப்பினும், இயேசுவானவரின் பேச்சு அந்த நாட்களில் வாழ்ந்தவர்கள் அந்திக்கிறிஸ்து தேவன் என்று அறிவிப்பதையும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக யுத்தம் நடத்தப்படு வதையும் தாங்கள் நேரில் காணுவோம் என்ற எண்ணத்தையே அவர்களுக்குக் கொடுத்தது என்பதை மறுபடியுமாகக் காண்கிறோம். இந்த நிகழ்ச்சிக்கு முன்பாகக் கிறிஸ்தவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று சொல்லப்படுவதற்கு இது முரண்பாடாக இருக்கிறது. அந்திக்கிறிஸ்து தானே தேவன் என்று அறிவிப்பதற்கு முன்பாக இயேசுவானவர் வந்து அவர்களைக் காப்பாற்றுவாரா என்று நாம் பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்களிடம் கேட்டிருப்போமானால் அவர்கள் ''நிச்சயமாக இல்லை'' என்றுதான் பதிலளித்திருப்பார்கள்.

### பரிசுத்தவான்களுக்கு எதிரான யுத்தம்

அந்திக்கிறிஸ்து விசுவாசிகளைச் சித்திரவதை செய்வான் என்பதைக் குறித்து வேதாகமத்தின் பிற இடங்களிலும் சொல்லப்பட்

டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டதை அவர் வெளிப்படுத்தல் நூலில் எழுதி வைத்திருக்கிறார்:

> பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும் நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப் பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது [வெளி. 13:5–7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அந்திக் கிறிஸ்துவுக்கு நாற்பத்திரண்டு மாதம், அதாவது மூன்றரை ஆண்டுகள், ''யுத்தம்பண்ண'' அதிகாரம் கொடுக்கப்பட்டது என்பதைக் கவனியுங்கள். இது ஏழாண்டு உபத்திரவ காலத்துக்கு மிகச் சரியாகப் பாதி அளவாக இருக்கிறது. உபத்திரவகாலத்தின் இரண்டாவது நாற்பத்திரண்டு மாத கால அளவிலேயே அவனுக்கு ''யுத்தம்பண்ண'' அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் உபத்திரவ காலத்தின் முடிவில் கிறிஸ்து அவனுக்கும் அவனுடைய சேனைகளுக்கும் எதிராக யுத்தம்பண்ண வரும்போது அவனுடைய அதிகாரம் முழுவதுமாக அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

நாற்பத்திரண்டு மாதங்களுக்கு ''யுத்தம்பண்ண அதிகாரம்'' கொடுக்கப்பட்டது என்பது *சிறப்பான* அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. ஏனென்றால் அந்திக்கிறிஸ்து எழும்பியபோது தேவனால் அவனுக்குக் *கொஞ்சம்* அதிகாரம் கொடுக்கப்பட்டது என்பது நிச்சயமாகிறது. இந்தச் சிறப்பான ''யுத்தம்பண்ண அதிகாரம்'' பரிசுத்தவான்களை மேற்கொள்ளுவதற்காக அவனுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தைக் குறிக்கலாம். ஏனென்றால் தானியேலின் புத்தகத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டுமாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும் காலம் வருமட்டாகவும், இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன். ... உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப்





> பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் [தானியேல் 7: 21–22, 25 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பரிசுத்தவான்கள் அந்திக்கிறிஸ்துவின் கையில் ''ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும்'' கொடுக்கப்படுவார்கள் என்று தானியேல் முன்னறிவித்திருப்பதை நாம் காண்கிறோம். இதை வெளிப்படுத்தல் 12:6 மற்றும் 14ஆம் வசனங்களோடு ஒப்பிடும்போது இது *மூன்றரை ஆண்டுகள்* என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. வெளிப்படுத்தல் 12:6 வசனத்தில் அடையாளரீதியாகக் குறிப்பிடும் ஒரு ஸ்திரீக்கு ''ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் .... உண்டாயிருந்தது'' என்று நாம் வாசிக்கிறோம். ஆண்டுக்கு 360 நாட்களாகக் கணக்கிடும்போது இது மூன்றரை ஆண்டுகளைக் குறிக்கிறது. பிறகு எட்டு வசனங்கள் கழித்து இது மறுபடியுமாகக் குறிப்பிடப்படுகிறது. இப்போது ''ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி '' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் என்பது 1260 நாட்களுக்கு அதாவது மூன்றரை ஆண்டுகளுக்குச் சமமாக இருக்கிறது.

எனவே இந்தப் பின்னணியில் ''காலம்'' என்பது ஒரு *ஆண்டையும்*, ''காலங்கள்'' என்பது *இரண்டு ஆண்டுகளையும்*, ''அரைக்காலம்'' என்பது *அரையாண்டையும்* குறிக்கிறது. வெளிப்படுத்தல் 12:14 வசனத்தில் காணப்படும் இந்த அசாதாரணமான வெளிப்பாட்டுக்கும், தானியேல் 7:21 வசனத்தில் காணப்படும் அதே வார்த்தைகளுக்கும் ஒரே அர்த்தமே இருக்க வேண்டும். இப்படியாகப் பரிசுத்தவான்கள் மூன்றரை ஆண்டுகளுக்கு அந்திக் கிறிஸ்துவின் கையில் கொடுக்கப்படுவார்கள் என்பதை நாம் அறிகிறோம். வெளிப்படுத்தல் 13:5 வசனத்தில் அந்திக்கிறிஸ்துவுக்கு யுத்தம்பண்ண அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதிலும் இதே கால அளவே குறிப்பிடப்பட்டுள்ளது.

நாற்பத்திரண்டு மாதங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த இரண்டு காலங்களும் ஒரே காலகட்டத்தையே குறிக்கின்றன. இவை உபத்திரவ காலத்தின் மத்தியில் அந்திக்கிறிஸ்து தான் தேவன் என்று அறிவித்ததிலிருந்து துவங்குமானால், அடுத்த மூன்றரை ஆண்டு காலத்துக்குப் பரிசுத்தவான்கள் அவனுடைய கையில் கொடுக்கப்படுவார்கள். அந்தக் காலம் முடிவடையும்போது, அதாவது உபத்திரவகாலத்தின் முடிவில், கிறிஸ்து சபையை எடுத்துக்கொள்ள வரும்போது, அவர்களை

எடுத்துக்கொண்டு அவனுடைய கையிலிருந்து விடுவிப்பார். என்றாலும் இந்தக் காலகட்டம் ஏழாண்டு உபத்திரவ காலத்தின் வேறொரு கால கட்டத்தில் துவங்குமானால், சபை எடுத்துக்கொள்ளப்படுதலும் உபத்திர காலத்தின் முடிவுக்கு முன்பாக நடக்கும் என்ற முடிவுக்கே நாம் வர வேண்டும்.

இந்த இரண்டு சாத்தியக் கூறுகளில் இரண்டாவது சாத்தியக் கூறே உண்மையாக இருக்குமானால், அவன் தன்னைத் தேவனென்று அறிவிப்பதற்கு முன்பே பரிசுத்தவான்கள் அபாயத்துக்குத் தப்பும்படி மலைகளை நோக்கி ஓட வேண்டியிருக்கும். தர்க்கரீதியாக இது சரியானது போலத் தோன்றவில்லை.

இதில் முதலாவது சாத்தியக் கூறை நாம் எடுத்துக்கொள்ளு வோமானால், வெளிப்படுத்தலின் புத்தகத்தில் நாம் வாசிக்கும் தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்பின் நாட்களிலும் பரிசுத்தவான்கள் பூமியில் இருக்க வேண்டும். இதிலுள்ள கடினத்தைக் குறித்து நாம் பின்னால் பார்ப்போம்.

இப்போது மறுபடியமாக ஒலிவ மலைச் சொற்பொழிவுக்குச் செல்லுவோம்.

## பொய்யான மேசியாக்கள்

இயேசுவானவர் அடுத்துக் கள்ளக் கிறிஸ்துக்களைக் குறித்த செய்திகளினால் தவறாக வழிநடத்தப்படாமலிருக்க வேண்டியதின் முக்கியத்துவத்தைத் தமது சீஷர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்:

> அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார் களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் (மத். 24:23–25).





இயேசுவானவர் மறுபடியுமாக நீங்கள், உங்கள் போன்ற சொற்களைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள். அன்று ஒலிவ மலையில் அவர் கொடுத்த சொற்பொழிவைக் கேட்டவர்கள் தாங்கள் கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அதிகமான அற்புதங்களைச் செய்வதைக் காண்போம் என்றே நினைத்திருப்பார்கள். மின்னலைப்போலக் கிறிஸ்து வானத்தில் திரும்பி வருவதை அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம்.

இந்தக் காலகட்டத்தில் விழுந்துபோகும் அபாயம் அதிகமாக இருக்கும். ஏனென்றால் விசுவாசிகளுக்கு எதிரான துன்புறுத்தல் மிகக் கடுமையாக இருக்கும், கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசி களும் தங்கள் அற்புதங்களின் காரணமாக மக்களை உறுதிப்படுத்துகிற வர்களாக இருப்பார்கள். எனவேதான் தனது வருகைக்கு முன்னால் என்ன நடக்கும் என்பதைக் குறித்து இயேசுவானவர் தமது சீஷர்களை மறுபடியும் மறுபடியுமாக எச்சரித்திருக்கிறார். பலர் தவறாக வழிநடத்தப் படுவதுபோல அவர்களும் வழிநடத்தப்படுவதை அவர் விரும்பவில்லை. நிலைத்திருக்கும் மெய்யான விசுவாசிகள் கிறிஸ்து மின்னலைப்போலத் திரும்பி வருவதற்காகக் காத்திருப்பார்கள். ஆனால், கழுகுகள் வனாந்தரத்திலுள்ள பிணங்களை நோக்கி இழுக்கப்படுவதுபோல, அவரை மெய்யாகப் பின்பற்றாதவர்கள் கள்ளக் கிறிஸ்துக்களை நோக்கி இழுக்கப்படுவார்கள்.

## வானத்தில் அடையாளங்கள்

இயேசுவானவர் தொடர்ந்து இவ்வாறு கூறினார்:

> அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள் (மத். 24:29–31).

இயேசுவானவரின் ஒலிவமலைச் சொற்பொழிவின் இந்தப் பகுதியிலிருக்கும் சாயல்கள் ஏற்கெனவே அவருடைய நாட்களின்

யூதர்களுக்கு அறிமுகமானவைகளாகவே இருந்தன. ஏனென்றால், இவை உலகத்தின் கடைசிக் காலத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வேளையில் காணப்படும் சாயல்கள் என்று ஏசாயாவும் யோவேலும் விவரித்திருக்கிறார்கள். இது ''கர்த்தருடைய நாள்'' என்று பெரும்பாலும் குறிப்பிடப்படுகிறது. அந்நாளில் சூரியனும் சந்திரனும் இருண்டுபோயிவிடும் [பார்க்க, ஏசாயா 13:10–11; யோவேல் 2:31]. அப்போது உலகத்தில் இருக்கும் எல்லோரும் இயேசுவானவர் மகிமையோடு வானத்தில் திரும்பி வருவதைக் கண்டு புலம்புவார்கள். அப்போது இயேசுவானவரின் தூதர்கள் ''அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.'' அதாவது, விசுவாசிகள் வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இயேசுவானவரோடு சேர்ந்து கொள்ளுவார்கள். இவையெல்லாம் ''வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே'' நடக்கும்.

மறுபடியுமாக, ஒலிவ மலைச் சொற்பொழிவின் இந்தக் கட்டத்தில் நீங்கள் பேதுரு, யாக்கோபு அல்லது யோவானிடம் இயேசு அவர்களுக்காக அந்திக்கிறிஸ்து மற்றும் உபத்திரவகாலத்துக்கு முன்பா அல்லது பின்பா எப்போது வருவார் என்று கேட்டிருப்பீர்களானால், அவர்கள் ''பின்பு'' என்றுதான் பதிலளித்திருப்பார்கள்.

### வருகையும் சபை எடுத்துக்கொள்ளப்படுதலும்

ஒலிவ மலைச் சொற்பொழிவின் இந்தப் பகுதி பவுல் எழுதிய ஒரு காரியத்துக்கு ஒத்ததாக இருக்கிறது. அதுவே சபை எடுத்துக்கொள்ளப் படுதலாகும். என்றாலும் பல விளக்கவுரையாளர்கள் இது உபத்திரவ காலத்துக்கு *முன்னால்* நடப்பதாகக் கூறுகிறார்கள். நாம் இந்த அத்தியாயத்தில் ஏற்கெனவே ஆய்வுசெய்த கீழ்க்கண்ட வேதாகமப் பகுதியைப் பாருங்கள்:

> அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும்,





> *தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்*; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். *பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு*, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். சகோதரரே, இவைகள் நடக்குங்காலங்களையும் சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் *கர்த்தருடைய நாள்* வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை [1 தெச. 4:13–5:3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவர் தேவ எக்காளத்துடனே வானத்திலிருந்து இறங்கி வருவதைக் குறித்தும், விசுவாசிகள் ''மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதையும்'' குறித்துப் பவுல் எழுதியிருக்கிறார். இது மத்தேயு 24:30–31 வசனங்களில் இயேசுவானவர் சொல்லுவதற்கு அப்படியே ஒத்ததாக இருக்கிறது. அது அந்திக் கிறிஸ்துவுக்கும் உபத்திரவகாலத்துக்கும் பின்வருவது என்பது தெளிவாக இருக்கிறது.

மேலும், பவுல் கிறிஸ்துவின் வருகையைக் குறித்துத் தொடர்ந்து எழுதும்போது, அது நடக்கும் ''காலங்களையும் சமயங்களையும்'' குறித்து எழுத வேண்டியதில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். ஏனென்றால் ''இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் *கர்த்தருடைய நாள்* வருமென்று'' அவர்கள் அறிந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்துவின் வருகையும் சபை எடுத்துக்கொள்ளப்படுதலும் ''கர்த்தருடைய நாளில்'' வருமென்று பவுல் விசுவாசித்தார். அந்த நாளில் ''சமாதானத்தையும் சவுக்கியத்தையும்'' எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களின்மேல் கடுமையான கோபாக்கினையும் அழிவும் விழும். கிறிஸ்து தமது சபையை எடுத்துக்கொள்ளும்படி திரும்பி வரும்போது அவருடைய கோபாக்கினை உலகத்தின்மீது விழும்.

கிறிஸ்துவின் கோபாக்கினையைக் கொண்டுவரும் வருகையைக் குறித்து அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாவது நிருபத்திலும் குறிப்பிட்டிருக்கிறார்:

> உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு

> எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு, *கர்த்தராகிய இயேசு* தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், *வானத்திலிருந்து வெளிப்படும்போது* அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத் தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் [2 தெச. 1:6–10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

துன்புறுத்தப்படும் தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலளிக்கும்படி கிறிஸ்து திரும்ப வரும்போது [பார்க்க, 1 தெச. 1:4–5] அவர் அவர்களைத் துன்புறுத்தியவர்களைத் துன்புறுத்தும்படி ''ஜூவாலித்து எரிகிற அக்கினியோடு'' வந்து பதில்செய்வார் என்று சொல்லியிருக்கிறார். இது சிலர் சொல்லுகிறதுபோல உபத்திரவ காலத்துக்கு முன்வரும் வருகையைப்போல இருக்கவில்லை. ஏழாண்டு உபத்திரவகாலத்துக்கு *முன்பாகக்* கிறிஸ்து வந்து சபையை எடுத்துக் கொள்ளுவார் என்றும், இது *இரகசிய* வருகையாக இருக்கும் என்றும், அவர் *அமைதியாகச்* சபையை எடுத்துக்கொண்டு செல்லுவார் என்றும் இவர்கள் சொல்லுகிறார்கள். இல்லை, இது இயேசுவானவர் மத்தேயு 24:30–31 வசனங்களில் விவரித்துள்ளபடியே நடப்பதாகக் காணப்படு கிறது. உபத்திரவகாலத்தின் இறுதியிலோ அல்லது அதற்கு நெருக்கமான காலத்திலோ அவர் வரும்போது விசுவாசிகளை எடுத்துக் கொண்டு அவிசுவாசிகளின்மீது தமது கோபாக்கினையை ஊற்றுவார்.

### கர்த்தருடைய நாள்

பிறகு அதே நிருபத்தில் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> அன்றியும், சகோதரரே, *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து*, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது,





> எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, *கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச்* சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள் [2 தெச. 2:1–2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

முதலாவதாக, பவுல் கிறிஸ்துவின் வருகையையும் சபை எடுத்துக்கொள்ளப்படுதலையும் குறித்தே சொல்லுகிறார் என்பதைக் கவனியுங்கள். நாம் அவரிடத்தில் ''சேர்க்கப்படுவதைக்'' குறித்து அவர் எழுதியிருக்கிறார். மத்தேயு 24:31 வசனங்களில் இயேசுவானவர் பயன்படுத்திய அதே சொற்களை இவரும் பயன்படுத்துகிறார். அங்கே தூதர்கள் ''அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, பவுல் தான் 1 தெசலோனிக்கேயர் 4:13–5:2 வசனங்ளில் குறிப்பிட்டதுபோல இந்த நிகழ்ச்சிகளைக் ''கிறிஸ்துவின் நாளோடு'' சமப்படுத்துவதை நாம் காண்கிறோம். இது தெளிவாக இருக்கிறது.

பவுல் இவ்வாறு தொடர்ந்து எழுதியிருக்கிறார்:

> எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் *விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய*, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென் னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் [2 தெச. 2:3–4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பவுலைப் பொருத்தவரையில் சபை எடுத்துக்கொள்ளப் படுவதோடும் கிறிஸ்துவின் வருகையோடும் துவங்கும் கர்த்தருடைய நாள் ஏற்கெனவே வந்துவிட்டதாகத் தெசலோனிக்கேயக் கிறிஸ்தவர்களைத் தவறாக எண்ணும்படி யாரோ செய்திருந்தார்கள். ஆனால் விசுவாசத் துரோகத்துக்குப் [இயேசுவானவர் மத்தேயு 24:10 வசனத்தில் பலர் இடறிவிழுவதைக் குறித்துக் குறிப்பிட்டதாக இருக்கலாம்] *பிறகும்*, அந்திக்கிறிஸ்து தன்னைத் தேவனென்று அறிவித்துக்கொள்ளுவதற்குப் *பிறகுமே* அது வருமேயொழிய *முன்னால் வர முடியாது* என்று பவுல் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச்

சொல்லுகிறார். எனவே அந்திக்கிறிஸ்து தன்னைத் தேவன் என்று அறிவிப்பதற்கு முன்பாகத் தெசலோனிக்கேய கிறிஸ்தவர்கள் சபை எடுத்துக்கொள்ளப்படுதலையோ, கிறிஸ்துவின் வருகையையோ அல்லது கர்த்தருடைய நாளையோ எதிர்பார்க்க முடியாது என்று பவுல் தெசலோனிக்கேய விசுவாசிகளுக்குத் தெளிவாகச் சொல்லியிருக் கிறார். [74]

பிறகு பவுல் கிறிஸ்துவின் வருகையையும் அதைத் தொடர்ந்து அவர் அந்திக் கிறிஸ்துவை அழிப்பதைக் குறித்தும் எழுதுகிறார்:

> நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடைசெய்கிறது இன்னதென்றும் அறிந் திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொ ழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங் களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும் [2 தெச. 2:5–10].

கிறிஸ்து ''தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே'' அந்திக் கிறிஸ்துவை நாசம்பண்ணுவார் என்று பவுல் எழுதியிருக்கிறார்.

[74] இது ஒலிவ மலைச் சொற்பொழிவில் இயேசுவின் வார்த்தைகள் உபத்திரவ காலத்தின்போது மறுபடியும் பிறந்த யூதர்களுக்கு மட்டுமே பொருத்தமாக இருக்கிறது, ஏனென்றால் உபத்திரவ காலத்துக்கு முன்பாக மறுபடியும பிறந்த எல்லோரும் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற கொள்கையைத் தவறானதாக ஆக்குகிறது. பவுல் தெசலோனிக்கேயாவின் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு இந்த உறுதியைக் கொடுக்கிறார்: அந்திக் கிறிஸ்து தன்னைத் தேவன் என்று அறிவிக்கும் வரையில் [இது ஏழாண்டு உபத்திரவ காலத்தின் நடுவில் நடக்கிறது] அவர்கள் எடுத்துக்கொள்ளப் படுதலோ, கிறிஸ்துவின் வருகையோ இருக்காது என்று அவர் உறுதியாகச் சொல்லுகிறார்.





அவருடைய இந்தப் ''பிரசன்னம்'' ஒன்பது வசனங்களுக்கு முன்னால் சபை எடுத்துக்கொள்ளப்படும்போதுள்ள அவருடைய பிரசன்னமாக இருக்குமானால் [பார்க்க, 2:1], சபை கர்த்தரைச் சந்திக்கும்படி ஆகாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் அதே வேளையிலேயே அந்திக் கிறிஸ்து அழிக்கப்படுவான். வெளிப்படுத்தல் 19 மற்றும் 20ஆம் அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள விவரங்கள் இதற்குப் பொருத்தமாக இருக்கின்றன. அங்கே நாம் கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் [பார்க்க, வெளி. 19:11–16], அந்திக்கிறிஸ்து மற்றும் அவனுடைய சேனைகளின் அழிவைக் குறித்தும் [பார்க்க, வெளி. 19:17–21], சாத்தான் கட்டப்படுவதைக் குறித்தும் [பார்க்க, 20:1–3], ''முதலாம் உயிர்த்தெழுதலைக்''குறித்தும் [பார்க்க, 20:4–6] வாசிக்கிறோம். இந்த உயிர்த்தெழுதலின்போது ஏழாண்டு உபத்திரவகாலத்தில் இரத்தச் சாட்சிகளாக மரித்த விசுவாசிகள் உயிரோடு எழுப்பப்படுகிறார்கள். இது நீதியுள்ளவர்களின் முதல் பொதுவான உயிர்த்தெழுதலாக இருக்கிற படியால் இது ''முதலாம் உயிர்த்தெழுதல்'' என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவில் மரித்தவர்கள் எல்லோரும் சபை எடுத்துக்கொள்ளப்படும் போது சரீரப்பிரகாரமாக உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று வேதவசனம் சொல்லுகிறபடியால் [பார்க்க, 1 தெச. 4:15–17], அந்திக் கிறிஸ்து அழிக்கப்படும் அதே வேளையிலேயே சபை எடுத்துக்கொல்ளப்படுதலும் கிறிஸ்துவின் கோபாக்கினை வருகையும் நடக்கிறது என்பது சந்தேக மில்லாமல் தெரிகிறது.[75]

## ஆயத்தமாக இருத்தல்

நாம் மறுபடியுமாக ஒலிவமலைச் சொற்பொழிவுக்குத் திரும்புவோம்:

> அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர் விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக் கிறார் என்று அறியுங்கள். இவைகளெல்லாம்

[75] சிலர் வெளிப்படுத்தல் 20:4–6 வசனங்களில் குறிப்பிடப்படும் இந்த உயிர்த்தெழுதல் உண்மையில் *முதலாம்* உயிர்த்தெழுதலின் *இரண்டாம்* பகுதி என்று சொல்லுகிறார்கள். அதாவது இந்த உயிர்த்தெழுதல் சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கிறிஸ்து முதலில் திரும்பி வரும்போது நடந்தது என்று சொல்லுகிறார்கள். இப்படி அர்த்தம் கூறப்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன? வெளிப்படுத்தல் 20:4–6 வசனங்களில் குறிப்பிடப்படும் உயிர்த்தெழுதல் உண்மையில் இரண்டாவது உயிர்த்தெழுதலாக இருந்திருக்குமானால், அதை ''இரண்டாவது உயிர்த்தெழுதல்'' என்றே அழைத்திருக்கலாமே?

> சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகா தென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.[76] வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை [மத். 24:32–35].

தமது சீஷர்களில் எச்சரிப்பில்லாமல் மாட்டிக்கொள்ளுவதை இயேசுவானவர் விரும்பவில்லை. இதுவே ஒலிவ மலைச் சொற்பொழி வின் அடிப்படைக் கருத்தாக இருக்கிறது. ''இவைகளையெல்லாம் காணும்போது'' – உலகளாவிய உபத்திரவம், கள்ளப்போதகம், கள்ளத் தீர்க்கதரிசிகளும் கள்ளக்கிறிஸ்துக்களும் எழுதல், தானே தேவன் என்று அந்திக் கிறிஸ்து அறிவித்தல், பிறகு அவருடைய வருகை இன்னும் நெருங்கும்போது, சூரியனும் சந்திரனும் இருண்டு போய் நட்சத்திரங் கள் விழுவதைக் காணும்போது – ''அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார்'' என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

என்றாலும், அவருடைய வருகைக்குச் சில ஆண்டுகள், மாதங்கள், நாட்களுக்கு முன்வரும் அடையாளங்களைப் பற்றி அவர் சொன்னாலும், இறுதியில் தான் திரும்பி வரும் *சரியான* நேரம் ஒரு புதிராகவே இருக்கும் என்பதை அவர் அறிவித்திருக்கிறார்.

> அந்த நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் [மத். 24:36].

அடிக்கடி இந்த வசனம் அதன் பின்னணியைவிட்டு வெளியே எடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது அல்லவா? இயேசுவானவர் எந்த வேளையிலும் வந்து சபையை எடுத்துக்கொள்ளுவார் என்பதினால் நாம் அவருடைய வருகையைக் குறித்த *எந்தக் கருத்தையும்* பெற்றிருக்க வில்லை என்று சுட்டிக்காட்ட இந்த வசனம் அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது. என்றாலும் இதன் பின்னணியில் பார்க்கும்போது இயேசு வானவர் சொன்னதின் அர்த்தம் அது மட்டுமல்ல. அப்போதுதான் தான் திரும்பிவருவதற்கு முன்னால் நடக்கும் பல அடையாளங்களை அவர் குறிப்பிட்டு தமது சீஷர்கள் அவருடைய வருகைக்காக ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று எச்சரித்திருந்தார். என்றாலும் தாம் வரும் சரியான வேளையை மட்டுமே அறிய முடியாது என்று அவர்

[76] அன்று இயேசுவானவர் சொல்லியதைக் கேட்டவர்கள் எல்லோரும் தங்கள் தலைமுறையே இந்தக் காரியங்களைக் காணும் தலைமுறை என்று நினைத் திருந்தாலும் அப்படி நடக்கவில்லை என்பதை நாம் அறிவோம். எனவே 34:34 வசனத்திலுள்ள இயேசுவின் வார்த்தைகள் ஒரு சந்ததி முடிவதற்குள்ளாக இந்தக் காரியங்களெல்லாம் முடிந்துவிடும் என்று அர்த்தம் காணலாம். அல்லது இநதக் காரியங்கள் நடைபெறும் வரையில் கிறிஸ்தவர்களின் [அல்லது யூதர்களின்] *இனம்* [சில வேளைகளில் சந்ததி என்ற சொல் இப்படி மொழிபெயர்க்கப்படு கிறது] ஒழிந்து போகாது என்று அர்த்தம் கொள்ளலாம்.





சொல்லுகிறார். மேலும் இந்தப் பகுதியில் தாம் ஏழாண்டு உபத்திரவ காலத்துக்கு முன்பாகச் சபையை எடுத்துக்கொள்ளும்படி இரகசியமாகத் திரும்பிவரும் *முதல்* வருகையைக் குறிக்கவில்லை. அவர் உபத்திரவ காலத்தின் இறுதியிலோ அல்லது உபத்திரவகாலத்தின்போதோ வருவதைக் குறித்தே கூறப்பட்டுள்ளது. பின்னணியை நேர்மையாக நோக்குவோமானால் இதைக் குறித்த விவாதத்துக்கு இடமிருக்காது.

### அவருடைய வருகை – ஒரு முழுமையான ஆச்சரியமா?

சபை எடுத்துக்கொள்ளப்படுதல் உபத்திரவ காலத்தின் முடிவிலோ அல்லது அதற்கு அருகிலோ இருக்குமானால் இயேசுவானவர் சொல்லியதுபோல [அல்லது சொல்லியதாகக் கூறப்படுவதுபோல] அது வியப்பளிக்கும் காரியமாக இருக்காது என்று விவாதிக்கிறார்கள். ஏனென்றால் உபத்திரவத்தின் காரணமாக அப்படியொரு நிகழ்ச்சியை எதிர்பார்க்க முடியும். உபத்திரவகாலத்துக்கு முன்பே சபை எடுத்துக் கொள்ளப்படுதல் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் வேதவசனம் சொல்லுவதுபோல அவர்கள் ஆயத்தமாகவும் விழிப்போடும் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் உபத்திரவ காலம் முடியும்போதே இயேசுவின் வருகை இருக்கிறபடியால் அவர்கள் அதை முன்கூட்டியே அறிந்திருந்திருப்பார்களே என்று அவர்கள் விவாதிக் கிறார்கள்.

ஆனால் இயேசுவானவர் தமது ஒலிவமலைச் சொற்பொழிவில் கூறியிருப்பதெல்லாம் இந்த மறுப்புக்கு எதிரானதாகவே இருக்கிறது. உபத்திரவகாலத்தின் முடிவில் அல்லது அதற்கு அருகில் தமது வருகையைக் குறித்துச் சீஷர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய ஒலிவ மலைச் சொற்பொழிவின் நோக்கமாக இருக்கிறது. அவருடைய வருகைக்கு முன்வரும் பல அடையாளங்களை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். தாம் கூறும் அந்த நேரத்துக்குக் குறைந்த பட்சமாக ஏழு ஆண்டுகள் கழித்துத்தான் தாம் வரப் போகிறோம் என்பதை இயேசுவானவர் அறிந்திருந்தாலும் [அப்போது உபத்திரவகாலம் துவங்க வில்லை] அவர் ஆயத்தமாக இருக்கும்படியாகவும், விழிப்போடு இருக்கும்படியாகவும் தமது சொற்பொழிவில் அதிகமாக வலியுறுத்து வதற்குக் காரணம் என்ன? *தமது வருகை பல ஆண்டுகள் கழித்து இருந்தாலும் கிறிஸ்தவர்கள் ஆயத்தமாகவும் விழிப்போடும் இருக்க வேண்டும் என்று அவர் நம்பினார்* என்பதே இதற்கான காரணம் என்பது தெளிவாகிறது. விசுவாசிகளை ஆயத்தமாகவும் விழிப்பாகவும் இருக்கும்படி எச்சரித்த அப்போஸ்தலர்கள் இயேசுவானவர் சொல்லியதைத் தாங்களும் அப்படியே சொல்லியிருக்கிறார்கள்.

மேலும், உபத்திரவ காலத்துக்கு முன்னால் சபை எடுத்துக்கொள் ளப்படுவதின் காரணமாகத்தான் இந்த எச்சரிப்புகள் கொடுக்கப்பட்

டுள்ளன என்று நம்புகிறவர்கள் மற்றொரு பிரச்சினையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களைப் பொருத்தவரையில் கிறிஸ்துவின் முதலாம் வருகை உபத்திரவகாலத்தின் முடிவுக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் நடக்கிறது. எனவே இயேசுவின் வருகை *எந்த வேளையிலும்* இருக்கும் என்று சொல்ல முடியாது. அது உபத்திரவகாலம் முடிவதற்குச் சரியாக ஏழாண்டுகளுக்கு முன்னால் இருக்க வேண்டும். அப்படியானால் ஏழாண்டு உபத்திரவ காலத்துக்கு முன்னால் நடக்க வேண்டிய உலக நிகழ்ச்சிகள் நடக்கும்போது – இந்த நிகழ்ச்சிகளை எதிர்பார்த்து உறுதிப்படுத்த முடியும் – கிறிஸ்துவின் வருகை இருக்க வேண்டும். அப்போது அது உண்மையில் எதிர்பாராத வருகையாக இருக்க முடியாது அல்லவா?

உபத்திரவகாலத்துக்கு முன்பாகச் சபை எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கும் என்று சொல்லுபவர்களில் பெரும்பாலானவர்கள் நேர்மையாகப் பதிலளிப்பார்களானால் இப்போதைய உலக அரசியல் சூழ்நிலையின் காரணமாக இயேசு இன்றோ அல்லது நாளையோ திரும்பிவர முடியாது என்று தாங்கள் அறிந்திருப்பதை ஒப்புக்கொள்ளுவார்கள். ஏழாண்டு உபத்திரவ காலம் துவங்குவதற்கு முன்பாக நடக்க வேண்டிய தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட பல நிகழ்ச்சிகள் இன்னும் நடக்க வேண்டியிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, நாம் விரைவிலேயே தானியேலின் புத்தகத்திலிருந்து பார்க்கப் போவதுபோல, அந்திக் கிறிஸ்து இஸ்ரவேலரோடு ஏழாண்டுக்காக ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளுவான். அதுவே உபத்திரவகாலத்தின் துவக்கத்துக்கு அடையாளமாக இருக்கிறது. எனவே சபை எடுத்துக்கொள்ளப்படுவதானது உபத்திரவகாலத்துக்கு முன்னால் நடப்பதாக இருக்குமானால், அது அந்திக் கிறிஸ்து இஸ்ரவேலரோடு உடன்படிக்கை செய்துகொள்ளும்போது நடக்க வேண்டும். இப்படியொன்று நடப்பதற்கான அரசியல் சூழ்நிலை காணப்படும் வரையில் உபத்திரவ காலத்துக்கு முன்னால் சபை எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கும் என்று சொல்லும் கொள்கையை உடையவர்கள் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்க வேண்டியதில்லை.

மேலும், இந்த உபத்திரவகாலத்துக்கு முன்னால் சபை எடுத்துக் கொள்ளுதல் கொள்கையை விசுவாசிப்பவர்கள் உபத்திரவ காலத்தின் முடிவிலும் கிறிஸ்து வருவார் என்று விசுவாசிக்கிறார்கள். அப்போது அந்த வருகை இயேசு சொன்னதுபோல எவரும் அறியாத நேரத்தில் நடக்காதே? உபத்திரவ காலத்தின் துவக்கத்திலிருந்து ஏழு ஆண்டுகளைக் கூட்டிக்கொண்டு அந்த நாளைக் கண்டுபிடித்துவிடலாமே?

இயேசுவானவர் உண்மையாகச் சொல்லியதிலிருந்து அவர் தம்முடைய வருகை முழுவதுமாக ஆச்சரியப்பட வைக்கும் ஒன்றாக





இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை என்பது தெரிகிறது. உபத்திரவ காலத்தின் சில நிகழ்ச்சிகளின் மூலமாக நாம் அதை எதிர்பார்க்க வேண்டும் என்றே அவர் *விரும்பினார்*. தமது சீஷர்களோ அல்லது உலகமே திடீரென்று திகைத்து நிற்க வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. அவர் தமது ஒலிவ மலைச் சொற்பொழிவில் தொடர்ந்து இவ்வாறு சொல்லுகிறார்:

> நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும். அப்பொழுது, இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.[77] உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்தெழுந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத். 24:37–44).

மறுபடியுமாக தமது சீஷர்கள் தமது வருகைக்காக ஆயத்தமாக இருக்க வேண்டுமென்ற கரிசனையை இயேசுவானவர் வெளிப்படுத்துகிறார். ஒலிவ மலைச் சொற்பொழிவில் அவர் இதற்கு முன்பாகவும் இதற்குப் பின்னாகவும் சொல்லிய எல்லாவற்றுக்கும் இதுவே அடிப்படைக் காணமாக இருக்கிறது. *அவர் அவர்களிடம் ஆயத்தமாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்று சொல்லியது அவருடைய வருகை முற்றிலும் திகைக்க வைக்கும் ஒன்றாக*

[77] சிலர் விவாதிப்பதுபோல யார் நியாயத்தீர்ப்பை எதிர்நோக்கப் போகிறார்கள் யார் இலலை என்பதைக் குறித்து இந்தப் பகுதி சொல்லவில்லை. சிலர் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக இருப்பார்கள், சிலர் இருக்கமாட்டார்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் ஆயத்தமாக இருப்பது அவர்களுடைய நித்திய விதியைத் தீர்மானிக்கிறது.

*இருக்கும் என்பதற்காக அல்ல, காலம் விரோதமாக இருக்கிறபடியால் அவர்கள் ஆயத்தமாகவும், விழிப்போடும் இருப்பது எவ்வளவு கடினம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகத்தான்.* இது இப்படியிருக் கிறபடியால், எந்த வேளையிலும் உபத்திரவ காலத்துக்கு முன்வரும் வருகையை எதிர்பார்த்திருப்பவர்கள் தாங்கள் மற்றவர்களைவிட ஆயத்தமாக இருப்பதாக நினைத்தாலும், உண்மையில் அவர்கள் எதிர்நோக்கப் போகும் காரியங்களுக்காக ஆயத்தமில்லாமில்லாமல் இருக்கலாம். உபத்திரவ காலத்தை எதிர்பார்க்காமல் இருக்கும் அவர்கள் திடீரென்று தாங்கள் அந்திக் கிறிஸ்துவின் ஆளுகையின்கீழாக உலகளாவிய உபத்திரவத்தில் சிக்கிக்கொள்ளும்போது, விட்டுவிடும் படியான சோதனை அவர்களைத் திக்குமுக்காடச் செய்யும். வேதாகமம் உண்மையில் போதிப்பதற்காக ஆயத்தமாக இருப்பதே அவசியமாகும்.

மறுபடியுமாக, பேதுரு, யாக்கோபு அல்லது யோவானிடம் அவர்கள் எப்போது கிறிஸ்து திரும்பி வருவதைக் காண்பார்கள் என்று கேட்போமானால், இயேசுவானவர் கூறியிருக்கும் எல்லா அடையாளங் களும் அவருடைய வருகைக்கு முன்பாக நடக்கும் என்றே பதிலளித் திருப்பார்கள். உபத்திரவ காலகட்டத்துக்கு முன்பாகவோ அல்லது அந்திக் கிறிஸ்துவின் எழுச்சிக்கு முன்பாகவே அவர்கள் அவர் வருவதை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

## இரவில் வரும் திருடன்

''இரவில் வரும் திருடனைக்'' குறித்த இயேசுவானவரின் ஒப்புமையும் அவர் தமது வருகையைக் குறித்துத் தமது சீஷர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக வருகைக்கு முன்வரும் அடையாளங்களைப்பற்றி அவர் வெளிப்படுத்தியதின் பின்னணியிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவானவர் எப்போது திரும்பி வருவார் என்பதைக் குறித்து எவரும் எந்தக் கருத்தையும் கொள்ளமுடியாது என்று சொல்லுவதற்காக இந்த ஒப்புமையைப் பயன்படுத்தக் கூடாது.

பவுல் மற்றும் பேதுரு இருவரும் ''கர்த்தருடைய நாளைக்'' குறித்து எழுதும்போது இயேசுவானவரின் ''இரவில் வரும் திருடனின்'' ஒப்புமையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் [பார்க்க, 1 தெச. 5:2–4; 2 பேதுரு 3:10]. இது ஏழாண்டு உபத்திரவ காலத்தின் முடிவிலோ அல்லது அதற்கு நெருக்கமாகவோ இயேசுவின் கோபாக்கினை வருகையைக் குறிக்கிறது என்று அவர்கள் விசுவாசித்தார்கள். என்றாலும் பவுல் தமது வாசகர்களுக்கு '' சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர் களல்லவே'' என்று எழுதியிருக்கிறார் [1 தெச. 5:4]. இயேசுவானவர் சொல்லியிருக்கும் அடையாளங்களை விழிப்போடு கவனித்து,





அவருக்குக் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருப்பவர்கள் அந்தகாரத்தில் இருப்பதில்லை என்பதே அவருடைய கருத்தாகும். எனவே கிறிஸ்துவின் வருகை அவர்களைத் திகைக்க வைக்கப் போவதில்லை. அவர்களைப் பொருத்தவரையில் இயேசுவானவர் இரவில் வரும் திருடனைப்போல *வரப்போவதில்லை*. அந்தகாரத்தில் இருக்கிறவர்களே திகைத்துப் போவார் கள். இதைத்தான் இயேசுவனவர் போதித்தார். [பார்க்க, வெளிப்படுத்தல் 3:3 மற்றும் 16:15 வசனங்களில் அவர் திருடனைப்போல வரும் ஒப்புமையைப் பயன்படுத்தியிருக்கிறார். 16:15 வசனத்தில் அவர் அர்மகெதோன் யுத்தத்தின் பின்னணியில் இதைச் சொல்லியிருக்கிறார்].

ஒலிவ மலைச் சொற்பொழிவின் இந்த இடத்திலிருந்து இயேசு வானவர் தமது சீஷர்களை மறுபடியும் மறுபடியும் தமது வருகை குறித்து எச்சரிப்பதை நாம் பார்க்கிறோம். அதே வேளையில் அவர் உண்மையில் லாத வேலைக்காரன், பத்துக் கன்னிகைகள், தாலந்துகள் பற்றிய உவமைக் கதைகளை அவர்களுக்குச் சொல்லி அவர்கள் எப்படி ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும் போதித்திருக்கிறார். செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் நியாயந்தீர்க்கப்படுவதைக் குறித்தும் அவர் முன்னறிவித்திருக்கிறார் [இவை எல்லாவற்றையும் வாசிக்க வேண்டும்]. ஒவ்வொரு முறையும் தமது வருகைக்காக ஆயத்தமில்லாமல் இருக்கிறவர்கள் நரகத்துக்குப் பாத்திரவான்களாக இருக்கிறார்கள் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார் [பார்க்க, மத். 24:50–51; 25:30, 41–46]. ஆயத்தமாக இருப்பது என்றால் ஆண்டவர் வரும்போது அவருடைய சித்தத்தைச் செய்துகொண்டிருப்பதாகும். [78]

## மற்றொரு எதிர்ப்பு

சபை எடுத்துக்கொள்ளப்படுவது உபத்திரவ காலத்தின் இறுதியிலோ அல்லது அதற்கு அருகிலோ இருக்கமுடியாது என்று சொல்லுகிறவர்கள் வேதாகமரீதியாக நீதியுள்ளவர்கள் அநீதியுள்ளவர்களோடு சேர்த்துத் தண்டிக்கப்படுவதில்லை என்பதின் அடிப்படையைச் சுட்டிக்காட்டுகிறார் கள். இதற்காக அவர்கள் நோவா, லோத்து, எகிப்தில் இஸ்ரவேலர் இவர் களின் எடுத்துக்காட்டுகளையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

[78] இயேசுவானவர் தமக்கு நெருக்கான சீஷர்களிடம் அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறபடியால், அவர்கள் ஆயத்தமில்லாமல் போகக்கூடிய சாத்தியக் கூறு இருப்பதை இது குறிக்கிறது. பாவத்தின் காரணமாக ஆயத்தமில்லாமல் இருந்தால் நித்திய தண்டனை கிடைக்கும் என்று அவர் அவர்களை எச்சரித்திருக்கிறபடியால், பாவத்தின் காரணமாக அவர்கள் தங்கள் இரட்சிப்பை இழந்துவிட முடியும் என்பதும் தெளிவாகிறது. இது எவ்வளவாக பரிசுத்தத்தின் முக்கியத்துவத்தையும், விசுவாசிகளால் தங்கள் இரட்சிப்பை இழந்துபோவது கூடாத காரியம் என்று போதிப்பவர்களின் பிழையையும் நமக்கு உணர்த்த வேண்டும்!

ஏழாண்டு உபத்திரவகாலத்தின்போது நீதியுள்ளவர்கள் தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளாக மாட்டார்கள் என்று நம்புவதற்கான நல்ல காரணத்தை நாம் பெற்றிருப்பது உண்மைதான். ஏனென்றால் அது பல வேதாகமரீதியான முன்மாதிரிகளுக்கும், வாக்குத்தத்தங்களுக்கும் விரோதமாக இருக்கும் [எடுத்துக்காட்டாக, பார்க்க, 1 தெச. 1:9–10; 5:8].

என்றாலும், நீதியுள்ளவர்களும் பாடுகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் உபத்திரவகாலத்தைக் குறித்து இயேசுவானவர் முன்னறிவித்திருக்கிறார். அவர்கள் தேவனுடைய கைகளில் உபத்திரவிக்கப்படுவதில்லை, அநீதியுள்ளவர்களால் உபத்திரவிக்கப்படுகிறார்கள். கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களுக்கு விலக்கிவைக்கப்படுவதில்லை, அவர்களுக்கு உபத்திரவங்கள் உண்டு என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஏழாண்டு உபத்திரவ காலத்தின்போது பல விசுவாசிகள் தங்கள் உயிரை இழந்து போவார்கள் [பார்க்க, மத். 24:9; வெளி. 6:9–11; 13:16; 16:5–6; 17:6; 18:24; 19:2]. பலர் சிரச்சேதம் செய்யப்படுவார்கள் [பார்க்க, வெளி. 20:4].

இப்படியாக ஒரு குறிப்பிட்ட தேசத்தில் எல்லா விசுவாசிகளும் இரத்தச்சாட்சிகளாக மரித்திருப்பார்களானால், அந்தத் தேசத்திலுள்ள எஞ்சியவர்களின்மீது தேவ கோபாக்கினை ஊற்றப்படுவதற்குத் தடை எதுவும் இராது. மேலும், அந்தத் தேசத்தில் விசுவாசிகள் இருப்பார்களானால், தேவன் தாம் தீயவர்களுக்குக் கொடுக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து விசுவாசிகளைக் காப்பாற்றுவதற்கு வல்லவராக இருக்கிறார். மோசேயின் நாட்களில் அவர் எகிப்தியரை நியாயந்தீர்த்தபோது இதை நிரூபித்திருக்கிறார். அருகிலிருந்த எகிப்தியரின்மீது ஒவ்வொரு நியாயத்தீர்ப்பாக விழுந்தபோதிலும், ஒரு நாய்கூட இஸ்ரவேலருக்கு எதிராகத் தனது வாயை அசைக்கவில்லை [பார்க்க, யாத். 11:7]. இதைப் போலவே, வெளிப்படுத்தலின் புத்தகத்தில் தீயவர்களை ஐந்து மாதங்கள் அளவுக்குத் தேள்களைப்போலக் கொட்டும் வெட்டுக்கிளிகள் துன்புறுத்தினாலும், தேவனுடைய முத்திரையைத் தரித்திருந்தவர்களைத் துன்புறுத்த அவைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை [பார்க்க, வெளி. 9:1–11].

### வெளிப்படுத்தலில் சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

வெளிப்படுத்தலின் புத்தகத்தில் எந்த இடத்திலும் நாம் சபை எடுத்துக்கொள்ளப்படுவதைக் குறித்து வாசிக்கவில்லை. கிறிஸ்து தோன்றுவதைக் குறித்தும் பத்தொன்பதாம் அதிகாரத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கே அவர் அர்மகெதோன் யுத்தத்தில் அந்திக் கிறிஸ்துவையும் அவனுடைய சேனைகளையும் அழிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போதும் சபை எடுத்துக்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்படவில்லை. என்றாலும், இதே வேளையில் உபத்திரவகாலத்தில் இரத்தச்சாட்சிகளாக மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது [பார்க்க, 20:4]. கிறிஸ்துவின் வருகையின்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று பவுல் எழுதியிருக்கிறபடியாலும், இதே வேளையில்தான் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்கிறபடியாலும், மேலும் நாம் ஏற்கெனவே பார்த்த வசனங்களின் அடிப்படையைக் கொண்டும், சபை எடுத்துக்கொள்ளப்படுவதானது ஏழாண்டு உபத்திரவ காலத்தின் முடிவுவரையில் நடக்காது என்றே நாம் நம்ப வேண்டும். இந்த உபத்திரவகாலத்தைக் குறிதது வெளிப்படுத்தல் 19 மற்றும் 20ஆம் அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது.





ஆனால் வேறு கண்ணோட்டங்களும் இருக்கின்றன.

சிலர் வெளிப்படுத்தல் 6 மற்றும் 7ஆம் அதிகாரங்களில் சபை எடுத்துக்கொள்ளப்படுவதைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். வெளிப்படுத்தல் 6:12–13 வசனங்களில், ‘‘சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று’’ என்று நாம் வாசிக்கிறோம். ‘‘வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது’’ என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அடையாளங்களும் தாம் வந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு முன்னால் நடக்கும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறபடியால் [பார்க்க, மத். 24:29–31], இது சபை எடுத்துக்கொள்ளப்படுவதைக் குறிக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஏழாம் அதிகாரத்தில் ‘‘மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்’’ என்று குறிப்பிடப்படும் ஒவ்வொரு ஜாதியையும், பாஷையையும் சேர்ந்த திரளான மக்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம் [வெளி. 7:14]. ஆனால் அவர்கள் முந்தைய அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல [பார்க்க, 6:9–11] இரத்தச்சாட்சிகள் அல்ல . எனவே இவர்கள் உபத்திரவகாலத்தின்போது , உபத்திரவங்களிலிருந்து *காப்பாற்றப்படும்படி* எடுத்துக்கொள்ளப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும்.

வெளிப்படுத்தல் 6:12–13 வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரபஞ்சத்தில் நடக்கும் நிகழ்வுகளுக்குப் பின்னர் ஒரு காலகட்டத்தில் சபை எடுத்துக்கொள்ளப்படுவது நடக்கும் என்று யூகிப்பது மிகச் சரியாகும். ஏனென்றால் மத்தேயு 24:29–31 வசனங்களில் இயேசுவானவர் இதைக் குறிப்பிட்டிருக்கிறார். ஏழாண்டு உபத்திரவ காலத்தின் எந்தக் கட்டத்தில் 6:12–13 வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரபஞ்சத்தில் நடக்கும் நிகழ்வுகள் நடக்கும் என்று எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. வெளிப்படுத்தல் 6:1–13 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக நடக்கும் என்றால், 6:13 வசனத்துக்குப் பிறகு சபை எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும் என்றால், அந்திக் கிறிஸ்து வெளிப்படுத்தப்படுதல் [பார்க்க, 6:1–2], உலகளாவிய யுத்தம் [பார்க்க, 6:3–4], பஞ்சம் [பார்க்க, 6:5–6], பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக்

கொலைசெய்வதும் [பார்க்க, வெளி. 6:7–8], பலர் இரத்தச்சாட்சிகளாக மரிப்பதும் [பார்க்க, வெளி. 6:9–11] நடந்தபின்னரே சபை எடுத்துக் கொள்ளப்படுதல் நடக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஏழாண்டு உபத்திரவ காலத்தின் முடிவுக்கு *முன்னால்* நடக்கக்கூடும் என்றாலும், இவை முழு ஏழாண்டு காலகட்டத்தையும் விவரிக்கலாம், சபை எடுத்துக்கொள்ளுதல் இறுதியில் வருகிறது.

சபை எடுத்துக்கொள்ளப்படுதல் உபத்திரவகாலத்தின் முடிவுக்கு *முன்னால்* நடக்கும் என்பதற்கு ஆதரவாக வெளிப்படுத்தல் 8ஆம் அதிகாரத்துக்குப் பிறகு ஒவ்வொன்றும் ஏழு நியாயத்தீர்ப்புகளைக் கொண்ட இரண்டு வகை நியாயத்தீர்ப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன: ''எக்காள நியாயத்தீர்ப்புகள்'' மற்றும் ''கலச நியாயத்தீர்ப்பு''. இவைகளில் இரண்டாவது தேவனுடைய கோபத்தை முடித்துவைப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது [பார்க்க, 15:1]. என்றாலும் கலச நியாயத்தீர்ப்பு துவங்கு வதற்கு முன்பாக யோவான் ''மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் '' கண்டார் [15:2]. இந்த ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கலாம். அல்லது அவர்கள் இரத்தச்சாட்சிகளாக மரித்திருக்கலாம். வேதவசனம் சரியாகக் குறிப்பிடவில்லை. என்றாலும், 15:2 வசனமானது அதற்கு அருகில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளோடு காலவரிசைத் தொடர்பைக் கொண்டிருக்கிறதா என்று நமக்குத் தெரியாது.

ஏழாண்டு காலத்தின் முடிவுக்கு முன்னால் சபை எடுத்துக்கொள்ளப் படும் என்பதற்கு ஆதரவாக வெளிப்படுத்தலில் காணப்படும் மற்றொரு செய்தி இதுவாகும்: வெளிப்படுத்தல் 9:1–12 வசனங்களில் விவரிக்கப் பட்டுள்ள ஐந்தாவது ''எக்காள நியாயத்தீர்ப்பின்'' வேளையில் ''தவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்த'' தேள்களைப் போன்ற கொடுக்குகளையுடைய வெட்டுக் கிளிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது [9:4]. இஸ்ரவேலருடைய சந்ததியரில் 144,000 பேர் மட்டுமே இந்த முத்திரையைப் பெற்றிருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது [பார்க்க, வெளி. 7:3–8]. எனவே மற்ற விசுவாசிகள் எல்லோருமே ஐந்தாவது நியாயத்தீர்ப்புக்கு முன்னால் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பது தெரிகிறது. இல்லாவிட்டால் அவர்கள் வெட்டுக்கிளியின் வேதனைக்குத் தப்ப முடியாது. மேலும் இந்த வெட்டுக்கிளிகள் ஐந்து மாத கால அளவுக்கு மக்களைத் துன்புறுத்தும் என்கிறபடியால் [9:5,10], சபை எடுத்துக் கொள்ளப்படுவதானது ஏழாண்டு உபத்திரவகாலத்தின் முடிவுக்கு குறைந்தபட்சம் ஐந்து மாதங்களுக்கு முன்னால் நடக்கும் என்று நினைக்கப்படுகிறது.





வெளிப்படுத்தலின் சுருக்கமான விவரங்களில் குறிப்பிடப்படாத முத்திரையிடப்பட்ட மற்றவர்களும்கூட இருக்கலாம். எப்படியிருப்பினும், இது ஐந்தாவது நியாயத்தீர்ப்புக்கு முன்னால் சபை எடுத்துக்கொள்ளப் படுதல் நடக்கும் என்பதை நிரூபிக்குமானால், கொட்டக்கூடிய வெட்டுக் கிளிகள் விடுவிக்கப்படுவதற்கு முன்பாக விசுவாசிகளில் ஒருசாரார் எடுத்துக்கொள்ளப்படவில்லை, இஸ்ரவேலரின் சந்ததியரான முத்திரை யிடப்பட்ட 144,000 பேர் பூமியில் இருப்பார்கள் என்பதையும் அது சுட்டிக் காட்டுகிறது. என்றாலும், இந்த வெட்டுக்கிளிகள் கொடுக்கும் தேவ கோபாக்கினையின் வேதனையிலிருந்து தேவன் அவர்களைப் பாது காப்பார்.

இவையெல்லாவற்றுக்கும் முடிவான காரியம் என்ன? சபை எடுத்துக்கொள்ளப்படுவது ஏழாண்டு உபத்திரவ காலத்தின் முடிவுக்கு *அருகிலோ* அல்லது *முடிவிலோ* நடக்கும் என்றே என்னால் முடிவுக்கு வர முடிகிறது. விசுவாசிகள் தேவனுடைய கோபாக்கினைக்காகப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், அவர்கள் கடுமையான துன்புறுத்தலுக்கும், இரத்தச்சாட்சிகளாக மரிப்பதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

### உபத்திரவ காலம்

ஏழாண்டு உபத்திரவ காலத்தைப் பற்றி வேதாகமம் போதிப்பதை நாம் ஆழமாகப் பார்ப்போம். உபத்திரவகாலத்தின் அளவு ஏழாண்டுகள் என்ற முடிவுக்கு நாம் எப்படி வருகிறோம்? நாம் தானியேலின் புத்தகத்தை ஆய்வு செய்ய வேண்டும். வெளிப்படுத்தலின் புத்தகத்துக்கு அப்பாற்பட்டு வேதாகமத்தில் இறுதி நாட்களைக் குறித்து அதிகமாக வெளிப்படுத்தும் நூல் இந்தத் தீர்க்கதரிசன நூலாகும்.

இந்தப் புத்தகத்தின் ஒன்பதாம் அதிகாரத்தில் தானியேல் மற்ற யூதர்களோடு பாபிலோனில் சிறையிருப்பில் இருப்பதை நாம் காண்கிறோம். எரேமியாவின் புத்தகத்தை ஆய்வுசெய்யும்போது தானியேல் பாபிலோனில் யூதர்களின் சிறையிருப்பு எழுபது ஆண்டுகள் இருக்கும் என்று கண்டுபிடித்தார் [பார்க்க, தானி. 9:2; எரே. 25:11–12]. கிட்டத்தட்ட இந்த எழுபதாண்டு காலம் முடிவதை உணர்ந்த தானியேல், தமது மக்களின் பாவங்களை அறிக்கையிட்டு, இரக்கத்திற்காக ஜெபிக்கத் துவங்கினார். அவருடைய ஜெபத்துக்குப் பதிலாக காபிரியேல் தூதன் அவருக்குத் தரிசனமாகி, உபத்திரவகாலம் மற்றும் கிறிஸ்துவின் வருகை வரையிலுள்ள இஸ்ரவேலரின் இறுதிக் காலத்தைக் குறித்த உண்மை களைத் தானியேலுக்கு வெளிப்படுத்தினான். தானியேல் 9:24–27 வசனங்களில் காணப்படும் இந்தத் தீர்க்கதரிசனம் வேதாகமத்தில் அற்புதமான வெளிப்பாடுகளில் ஒன்றாகும். கீழே அந்த வசனங்களும், அடைப்புக் குறிக்குள் எனது குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன:

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் [*அநேகமாக*, இஸ்ரவேலரின் உச்சக்கட்டப் பாவகமாகிய தங்கள் சொந்த மேசியாவைச் சிலுவையில் அறைந்ததாக இருக்கலாம்], பாவங்களைத் தொலைக்கிறதற்கும் [*அநேகமாக*, சிலுவையில் கிறிஸ்துவின் மீட்பின் கிரியைக் குறிக்கலாம்], அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும் [சிலுவையில் கிறிஸ்துவின் மீட்பின் கிரியைக் குறிக்கிறது என்பதில் *ஐயமில்லை*], நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் [கிறிஸ்து இந்த உலகத்தில் தமது அரசின் ஆளுகையைத் துவங்குதல்], தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக் கிறதற்கும் [*அநேகமாக*, வேதவசனங்கள் எழுதி முடிக்கப்பட்டதைக் குறிக்கலாம், அல்லது ஆயிர மாண்டு ஆளுகைக்கு முன்வரும் எல்லாத் தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதலைக் குறிக்கலாம்], மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும் [*அநேகமாக*, ஆயிரமாண்டு ஆலயம் நிறுவப்படுவதைக் குறிக்கலாம்], உன் ஜனத்தின்மேலும் [இஸ்ரவேல்] உன் பரிசுத்த நகரத்தின்மேலும் [எருசலேம்] எழுபது வாரங்கள் [நாம் பார்க்கப் போகிறபடி இவை 490 ஆண்டுகளைக் குறிக்கின்றன] செல்லும்படி குறிக்கப் பட்டிருக்கிறது. இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால் எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல் [இந்தக் கட்டளை இதற்குப் பின்னர் கி.பி. 445இல் அகாஸ்வேரு ராஜாவால் பிறப்பிக்கப்பட்டது], பிரபுவாகிய மேசியா [ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து] வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும் [மொத்தம் 69 வாரங்கள், அதாவது 483 ஆண்டுகள்]; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும் [இது முன்பு பாபிலோனியரால் அழிக்கப்பட்ட எருசலேம் திரும்பக் கட்டப்பவதைக் குறிக்கிறது]; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார் [நாம் யூதர்களின் 360 நாட்களைக் கொண்ட ஆண்டுக்கணக்கின்படி கணக்கிடுவோ மானால் கிறிஸ்து கி.பி.32இல் சிலுவையில் அறையப்படுவார்]; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற





பிரபுவின் [அந்திக்கிறிஸ்து] ஜனங்கள் [ரோமர்கள்] அழித்துப்போடுவார்கள் [டைட்டசும் அவனுடைய ரோம இராணுவமும் கி.பி.70இல் எருசலேமை அழித்துப் போட்டதைக் குறிப்பிடுகிறது]; அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. அவர் [வரப்போகிற பிரபுவாகிய அந்திக்கிறிஸ்து] *ஒரு வாரமளவும்* [ஏழாண்டுகள் – உபத்திரவ காலம்] அநேகருக்கு [இஸ்ரவேலர்] உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது [மூன்றரை ஆண்டுகளில்] பலியையும் காணிக்கை யையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டை களோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான் [அந்திக்கிறிஸ்து எருசலேமில் யூத ஆலயத்தில் தன்னை நிறுத்தி, தானே தேவன் என்று அறிவித்தல், பார்க்க, 2 தெச. 2:1–4], நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் [இயேசு வந்து அந்திக்கிறிஸ்துவை அழித்தல்] என்றான் [தானி. 9:24–27 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

## 490 சிறப்பான ஆண்டுகள்

எருசலேமைத் திரும்பக் கட்டும்படி அகாஸ்வேரு அரசன் கி.மு. 445இல் கட்டளை கொடுத்ததிலிருந்து தேவன் வருங்கால வரலாற்றில் 490 சிறப்பான ஆண்டுகளை ஒதுக்கியிருக்கிறார். இந்த 490 ஆண்டுகள் 483 ஆண்டுகளாகவும், 7 ஆண்டுகளாகவும் இரண்டாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட முதல் 483 ஆண்டுகள் முடிவடையும்போது [இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட ஆண்டு], கடிகாரம் நிறுத்தப்படுகிறது. இப்போது கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு மேலாகக் கடிகாரம் நிறுத்தப்பட்டிருப்பதைத் தானியேல் ஒருவேளை எதிர்பார்த்திருக்க முடியாது. வருங்காலத்தில் ஒருநாளில் அந்தக் கடிகாரம் மறுபடியுமாக ஓடத் துவங்கி, ஏழாண்டுகள் ஓடும். இந்த இறுதியான ஏழாண்டுகள் ‘‘உபத்திரவகாலம்’’ என்றும் ‘‘தானியேலின் எழுபதாவது வாரம்’’ என்றும் அழைக்கப்படுகின்றன.

அந்த ஏழாண்டுகளும் இரண்டு மூன்றரை ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தானியேலின் தீர்க்கதரிசனத்தில் நாம் வாசித்தபடி இதன் மத்திய காலகட்டத்தில் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலரோடு தான் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, ‘‘பலியையும் காணிக்கை களையும் ஒழியப்பண்ணுவான்.’’ பிறகு அவன், பவுல் சொல்லுகிறபடி,

எருசலேம் ஆலயத்தில் தன்னை அமர்த்திக்கொண்டு, தானே தேவன் என்று அறிவிப்பான்.[79] இதுவே இயேசுவானவர் குறிப்பிட்ட ''பாழாக்கும் அருவருப்பாகும்'' [பார்க்க, மத். 24:15]. இது உலகம் இதுவரை கண்டிராத மிக மோசமான உபத்திரவத்திற்கு அடையாளமாக இருக்கிற படியால் [பார்க்க, மத். 24:21], யூதேயாவிலுள்ள விசுவாசிகள் மலைகளுக்கு ஓடிப்போகும்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள் [மத். 24:16].

யோவான் தனது தரிசனத்தில் யூதேயாவிலிருக்கிறவர்கள் ஓடிப் போவதை அடையாளரீதியாகக் கண்டிருக்கிறார். இதைக் குறித்து வெளிப்படுத்தல் பன்னிரண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. யூதேயாவின் விசுவாசிகள் வனாந்தரத்தில் தங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் பாதுகாப்பான இடத்தில் அடைக்கலம் புகுவார்கள். அங்கே ஏழாண்டு உபத்திரவ காலத்தின் எஞ்சிய மூன்றரை ஆண்டுகளுக்குப் ''போஷிக்கப்படுவார்கள்'' [பார்க்க, வெளி. 12:5, 13–17]. அவர்கள் தப்பிப்போனதின் நிமித்தமாகச் சாத்தானின் கோபத்தையும், அவன் ''தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய'' எஞ்சியவர்களோடு யுத்தம்பண்ணுவதை யோவான் முன்னரே கண்டிருக்கிறார் [வெளி. 12:17]. எனவேதான் அந்திக்கிறிஸ்து எருசலேமில் தானே தேவன் என்று அறிவிக்கும்போது எங்குமுள்ள விசுவாசிகள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் செல்ல வேண்டும் என்று நான் சொல்லுகிறேன்.

## தானியேலின் இறுதியான வெளிப்பாடு

தானியேலின் புத்தகத்தின் கடைசி பதின்மூன்று வசனங்கள் ஆர்வத்தைத் தூண்டும் பகுதியாக இருக்கிறது. இவை தானியேலிடம் பேசிய ஒரு தூதனின் வார்த்தைகளாகும். கீழே அந்த வசனங்களையும் அடைப்புக் குறிக்குள் எனது விளக்கங்களையும் கொடுத்திருக்கிறேன்.

> உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் [தேவதூதன்] அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும் [இது மத்தேயு 24:21 வசனத்தில் இயேசுவானவர் குறிப்பிட்ட அதே ஆபத்துக்காலமாகும்]; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் [இது யூதேயாவில் தப்பியோடுகிறவர்களையோ அல்லது சபை எடுத்துக்கொள்ளப்படும்போது விசுவாசிகள் காப்பாற்றப்படுவதையோ குறிக்கலாம்]. பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள் [நீதிமான்களும் தீயவர்களும் உயிரோடு எடுத்துக்கொள்ளப்படுதல்]. ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் [உயிர்த்தெழும்போது நீதிமான்கள் தேவனுடைய மகிமையினால் பிரகாசிக்கும் புதிய சரீரத்தைப் பெற்றிருப்பார்கள்]. தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்துவைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான். [கடந்த நூற்றாண்டில் போக்குவரத்திலும், அறிவிலும் ஏற்பட்டிருக்கும் அற்புதமான முன்னேற்றங்கள் இதன் நிறைவேறுதலைக் குறிக்கின்றன].
>
> அப்பொழுது, தானியேலாகிய நான் ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும் ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாகிய வேறே இரண்டுபேர் நிற்கக்கண்டேன். சணல்வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த ஆச்சரியமானவைகளின் முடிவு வர எவ்வளவுகாலம் செல்லும் என்று கேட்டான். அப்பொழுது சணல்வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடதுகரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் [இதை வெளிப்படுத்தல் 12:6 மற்றும் 12:14 வசனங்களின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் போது இது மூன்றரை ஆண்டுகளைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது] என்றும்; பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவுபெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும்

[79] எருசலேமில் தற்போது ஆலயம் இல்லாதபடியால் [இதை எழுதும் 2005ஆம் ஆண்டில்] எருசலேம் ஆலயம் திரும்பக் கட்டப்படும் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

[தானியேல் 7:25 வசனம் பரிசுத்தவான்கள் மூன்றரை ஆண்டுகளுக்கு அந்திக்கிறிஸ்துவின் கையில் கொடுக்கப்படுவார்கள் என்று சொன்னதுபோல, இவை ஏழாண்டு உபத்திரகாலத்தின் இறுதி மூன்றரை ஆண்டுகள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. தூதனால் கூறப்பட்ட நிகழ்ச்சிகளின் முடிவு ''பரிசுத்த ஜனங்களின் வல்லமை'' ''சிதறடிக்கப்படும்போது'' முடிவுக்கு வரும்] என்றென்றைக்கும் ஜீவித்திருக் கிறவர்பேரில் ஆணையிடக் கேட்டேன். நான் அதைக் கேட்டும், அதின் பொருளை அறியவில்லை; ஆகையால்: என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன். அதற்கு அவன்: தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும். அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் [உபத்திரவ காலத்தின் மூலமாக] விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள். அன்றாடபலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்கால முதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறுநாள் செல்லும். [இதை இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் *இடைப்பட்ட* காலம் என்று அர்த்தம் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் இவை இரண்டுமே ஏழாண்டு உபத்திரவ காலத்தின் மத்தியில் நடக்கின்றன. மாறாக, இந்த இரண்டும் நடக்கும் காலத்திலிருந்து 1290 நாட்கள் கழித்து மிகவும் முக்கியமான *ஒன்று* நடக்கப் போகிறது என்றே நாம் அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும். 1290 நாட்கள் என்பது 360 நாட்களைக் கொண்ட ஆண்டில் மூன்றரை ஆண்டுகளோடு 30 நாட்கள் அதிகமாகும். இந்தக் காலகட்டம் மறுபடியும் மறுபடியுமாகத் தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன் இந்த முப்பது நாட்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது யூகங் களுக்கே இடம் கொடுக்கிறது. இந்தப் புதிரோடுகூட தானியேலிடம் தூதன் அடுத்துக் கூறுவதும் புதிராக இருக்கிறது] ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்.





> [இப்போது கூடுதலாகச் சேர்க்கப்படும் நாற்பத்தைந்து நாட்கள் புதிராக இருக்கின்றன] நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் [தானியேலின் தனிப்பட்ட உயிர்த்தெழுதல்] என்றான். [தானியேல் 12: 1—13].

இந்தக் கூடுதலான 75 நாட்களுக்குப் பிறகு அற்புதமான ஒரு காரியம் நடக்கும் என்பது தெளிவாகிறது. நாம் இதைக் காணக் காத்திருக்க வேண்டும்.

வெளிப்படுத்தல் நூலின் இறுதி அதிகாரங்களை நாம் வாசிக்கும் போது, கிறிஸ்துவின் வருகைக்குப் பின்னால் பல நிகழ்ச்சிகள் நடக்கும் என்பது தெளிவாகிறது. இவைகளில் ஒன்று ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தாகும். இதைக்குறித்து ஒரு தூதன் யோவானிடம் ''ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்'' என்று கூறினான் [வெளி. 19:9]. இது ஒருவேளை தானியேலுடன் பேசிய தூதன் குறிப்பிட்ட அதே பாக்கியமாக இருக்கலாம். அப்படியானால் இந்த மகிமையான கலியாண விருந்து இயேசுவானவர் திரும்பிவந்த பிறகு இரண்டரை மாதங்கள் கழித்து நடைபெறும்.

வெளிப்படுத்தலின் புத்தகத்தில் நாம் வாசிக்கிறபடியே இந்த எழுபத்தைந்து நாட்களில் மற்ற நிகழ்ச்சிகளும் நடக்கும் என்பதை நாம் அறிகிறோம்: அந்திக்கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும் அக்கினிக் கடலில் வீசப்படுதல், சாத்தான் கட்டப்படுதல், கிறிஸ்துவின் உலகளாவிய ராஜ்யத்தின் நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்படுதல் [பார்க்க, வெளி. 19:20–20:4].

## ஆயிரமாண்டு ஆளுகை

*ஆயிரமாண்டு ஆளுகை* என்பது கிறிஸ்து தனிப்பட்ட முறையில் உலகத்தின்மீது ஆயிரம் ஆண்டுகள் ஆட்சிபுரிவதைக் குறிக்கிறது [பார்க்க, வெளி. 20:3,5,7]. இது ஏழாண்டு உபத்திரவகாலத்துக்குப் பின்னால் நடக்கிறது. கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்துவின் ஆளுகையைக் குறித்து ஏசாயா முன்னறிவித்திருக்கிறார்:

> நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; *கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்*; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்கா சனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென் றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்

> தும்படிக்கு, *அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை;* சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும். [ஏசாயா 9: 6–7, அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

இதைப்போலவே, காபிரியேல் தூதன் மரியாளிடம் அவளுடைய குமாரன் ஒருபோதும் முடிவுராத ராஜ்யத்தை ஆளுகைசெய்வார் என்று முன்னறிவித்தான்:

> தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். *அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது* என்றான் [லூக்கா 1:30–33 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. [80]

இந்த ஆயிரமாண்டு ஆளுகையின்போது இயேசுவானவர் எருசலேமின் சீயோன் மலையிலிருந்து ஆளுகைசெய்வார்; அதன் இப்போதைய உயரத்தைவிட உயரம் அதிகமாக்கப்படும். அவருடைய ஆளுகை எல்லா ஜாதியாருக்கும் பரிபூரண நீதியைக் கொண்டுவரும் ஆளுகையாக இருக்கும். முழு உலகத்திலும் சமாதானம் காணப்படும்:

> கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின்

[80] வார்த்தைகள் சொல்லுவதைக் கொண்டு ஒரு தீர்க்கதரிசனம் நடக்கும் காலத்தை அனுமானிப்பது எவ்வளவாகத் தவறாகப் போய்விடும் என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது. தன்னிடம் பிறக்கும் சிறப்பான குமாரன் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகைசெய்வார் என்று மரியாள் எதிர்பார்த்திருக்கலாம். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை ஆளுகைசெய்வார் என்று காபிரியேல் தூதன் சொன்னபோது அவருடைய பிறப்பைத் தொடர்ந்து இதுவும் நடக்கும் என்றே மரியாள் நினைத்திருக்கலாம். ஆனால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் குறைந்தபட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடைவெளி இருக்கும் என்று அவள் எதிர்பார்த்திருக்க முடியாது. நாமும்கூட தீர்க்கதரிசன வசனங்களுக்கு அர்த்தம் காணும்போது கவனமாக இருக்க வேண்டும்.





> பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை [ஏசாயா 2: 2–4].

சகரியாவும் இதை முன்னறிவித்தார்:

> நான் சீயோனுக்காக கடும் வைராக்கியங்கொண்டேன்; அதற்காக மகா உக்கிரமான வைராக்கியங்கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். … இன்னும் ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு பட்டணத்தின் குடிகள் மறு பட்டணத்தின் குடிகளிடத்தில் போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்துப் போவோம் வாருங்கள்; நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள். அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப்போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார் [சக. 8:2–3,20–23].

இந்த ஆயிரமாண்டு ஆளுகையின்போது விசுவாசிகளும் கிறிஸ்துவோடு சேர்ந்து ஆளுகை செய்வார்கள் என்று வேதாகமம்

போதிக்கிறது. இப்போது அவர்கள் எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கிறார்களோ அதற்கேற்றபடி அந்த ஆளுகையில் அவர்களுடைய பொறுப்பின் மட்டம் இருக்கும் [பார்க்க, தானி. 7:27; லூக்கா 19:12–27; 1 கொரி. 6:1–3; வெளி. 2:26–27; 5:9–10; 22:3–5].

நாம் நமது உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெற்றிருப்போம். ஆனால் அதே வேளையில் இயல்பான சரீரத்தைப் பெற்றிருக்கும் மக்களும் இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். மேலும், முற்பிதாக்களைப் போல நீண்ட ஆயுள் காணப்படும். மிருகங்கள் தங்கள் கொடூரத்தை விட்டிருக்கும்.

> நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை. அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ள வனாகிய பாவியோ சபிக்கப்படுவான். ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லை யென்று கர்த்தர் சொல்லுகிறார் [ஏசாயா 65:19–20, 25; மேலும் பார்க்க ஏசாயா 11:6–9].

வருங்கால ஆயிரமாண்டு ஆளுகையைக் குறித்து வேதாகமத்தில் பல இடங்களில், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுக்காக, பார்க்க, ஏசாயா 11:6–16; 25:1–12; 35:1–10; எரே. 23:1–5; யோவேல் 2:30–3:21; ஆமோஸ் 9:11–15; மீகா 4:1–7; சக. 3:14–20; சக. 14:9–21; வெளி. 20:1–6.

பல சங்கீதங்கள் தீர்க்கதரிசனரீதியாக ஆயிரமாண்டு ஆளுகைக்குப் பொருத்தமாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, 48ஆம் சங்கீதத் திலுள்ள இந்தப் பகுதியைப் பாருங்கள்:

> *கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர். வட திசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம். அதின் அரமனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார். இதோ,*





> ராஜாக்கள் கூடிக்கொண்டு, ஏகமாய்க் கடந்து வந்தார்கள். அவர்கள் அதைக் கண்டபோது பிரமித்துக் கலங்கி விரைந்தோடினார்கள். அங்கே நடுக்கங் கொண்டு, பிரசவ வேதனைப்படுகிற ஸ்திரீயைப் போல வேதனைப்பட்டார்கள் [சங். 48:1–6 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

இயேசுவானவர் ஆயிரமாண்டு ஆளுகையின் துவக்கத்தில் எருசலேமில் தமது நிர்வாகத்தை உறுதிப்படுத்தும்போது, உபத்திரவ காலத்துக்குத் தப்பிப் பிழைத்து உலகத்தில் ஆளுகைசெய்யும் பலர் இயேசுவின் ஆளுகையைக் குறித்துக் கேள்விப்பட்டு, அதைப் பார்க்க வருவார்கள். தாங்கள் பார்ப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடை வார்கள்![81]

கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆளுகையைக் குறித்துக் குறிப்பிடும் வேறு சங்கீதங்கள், சங். 2:1–12; 24:1–10; 47:1–9; 66:1–7; 68:15–17; 99:1–9; 100:1–5.

## நித்திய நிலை

ஆயிரமாண்டு ஆளுகைக்குப் பிறகு வேதாகம வல்லுநர்கள் ''நித்திய நிலை'' என்று குறிப்பிடும் காலகட்டம் துவங்குகிறது. இது புதிய வானத்தோடும், புதிய பூமியோடும் துவங்குகிறது. பிறகு 1 கொரிந்தியர் 15:24–28 வசனங்களின்படி இயேசுவானவர் எல்லாவற் றையும் தமது பிதாவானவரின் கரங்களில் ஒப்புக்கொடுப்பார்:

> அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் அதிகாரத்தையும் வல்லமை யையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக் கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத் தினாரே [சங். 8:6]; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப் படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன்

[81] மற்ற வேதவசனங்களைப் பார்க்கும்போது, ஆயிரமாண்டு ஆளுகையானது ரிசுவாசிகளோடு மட்டுமல்லாமல், பூமியிலிருக்கும் அவிசுவாசிகளோடும் துவங்கும் என்பது தெரிகிறது [பார்க்க, ஏசாயா 2:1–5; 60:1–5; தானி. 7:13–14].

தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

ஆயிரமாண்டு கால அளவும் கட்டப்பட்டிருக்கும் சாத்தான், ஆயிரமாண்டு ஆளுகையின் முடிவில் விடுவிக்கப்படுவான். உள்ளுக்குள் இயேசுவுக்கு விரோதமான எண்ணம் கொண்டிருந்து, கீழ்ப்படிவதுபோல நடித்துவந்தவர்களை அவன் வஞ்சிப்பான் [பார்க்க, சங். 66:3].

அவர்களுடைய இருதயத்தின் மெய்யான நிலைமையை வெளியரங்கமாக்கி, அவர்கள் நீதியான தண்டனையைப் பெறும்படியாக சாத்தான் அவர்களை ஏமாற்றுவதற்குத் தேவன் அனுமதிப்பார். அவனுடைய வஞ்சனைக்குக் கீழாக அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பரிசுத்த பட்டணமாகிய எருசலேமைத் தாக்கி, இயேசுவின் ஆளுகையை வீழ்த்தும்படி வருவார்கள். இந்த யுத்தம் அதிக காலத்துக்கு நடக்காது. ஏனென்றால் வானத்திலிருந்து வரும் அக்கினி சேனைகளை அழித்துப்போடும், சாத்தான் நிரந்தமாக அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவான் [பார்க்க, வெளி. 20:7–10].

யுத்தத்துக்காக இப்படிக் கூடிவருவதைக் குறித்து 2ஆம் சங்கீதத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது:

> ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக் காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி; அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மை விட்டு எறிந்து போடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருப்பவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப் பண்ணுவார். நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன் என்றார். தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்; என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன். இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப் போல் அவர்களை உடைத்துப்போடுவீர்





> என்று சொன்னார். இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள். . பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

## இறுதியான நியாயத்தீர்ப்பு

நித்திய நிலைக்கு முன்பாக ஒரே இறுதியான நியாயத்தீர்ப்பு நடைபெறும். எல்லாக் காலத்தையும் சேர்ந்த அநீதியுள்ளவர்கள் சரீரப் பிரகாரமாக உயிரோடு எழுப்பப்பட்டு, தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாகக் கொண்டுவரப்படுவார்கள். அங்கே அவர்களுடைய செய்கைக்குத் தக்கதராக அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு அளிக்கப்படும் [பார்க்க, வெளி. 20:5,11–15]. இப்போது ஹேடிசிலிருக்கும் எல்லோரும் நியாயத்தீர்ப்புக்காக அவருக்கு முன்பாகக் கொண்டுவரப்படுவார்கள். இந்த நியாயத்தீர்ப்பு ‘‘பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு’’ என்று அழைக்கப்படுகிறது. நியாயந்தீர்க்கப்பட்ட இவர்கள் கெஹன்னா எனப்படும் அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். இது ‘‘இரண்டாம் மரணம்’’ என்று அழைக்கப்படுகிறது [வெளி. 20:14].

பழைய வானமும் பூமியும் ஒழிந்துபோவதோடு நித்திய நிலை துவங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் இயேசுவானவரின் வாக்குத்தத்தம் இப்படியாக நிறைவேற்றப்படுகிறது: ‘‘வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை’’ [மத். 24:35].

பிறகு பேதுரு தனது இரண்டாவது நிருபத்தில் முன்னறிவித்தது போல தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் உண்டாக்குவார்:

> கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய

> வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்ற வர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத் தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருங்கள் [2 பேதுரு 3:10–14; மேலும் பார்க்க, ஏசாயா 65:17–18].

இறுதியாக, புதிய எருசலேம் வானத்திலிருந்து பூமிக்கு இறங்கிவரும் [பார்க்க, வெளி. 21:1–3]. அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட ஒன்றரை மடங்கு பெரிதாக இருக்கும் அந்தப் பட்டணத்தின் மகிமைகளையும் [பார்க்க, வெளி. 21:16], ஒருபோதும் முடிவுராத காலத்தின் அற்புதங்களையும் நமது சிந்தையினால் கிரகித்துக்கொள்ள முடியாது. நாம் தேவனுடைய ஆளுகையின் கீழாக, இயேசுகிறிஸ்து வுக்கு மகிமையுண்டாகும்படியாக, பரிபூரணமான சமுதாயத்தில் நித்தியமாக வாழ்வோம்!



## 30

# ஆவிக்குரிய யுத்தம் குறித்த நவீன கட்டுக்கதைகள், பகுதி I

சமீப காலங்களில் சபைகளில் ஆவிக்குரிய யுத்தம் குறித்த கருத்து அதிகமாகப் பிரபலமாகிவருகிறது. துரதிருஷ்டவசமாக, போதிக்கப்படும் பல காரியங்கள் வேதவசனங்களுக்கு முரண்பாடான வையாக இருக்கின்றன. இதன் விளைவாக, உலகெங்கிலுமிருக்கும் பல போதகர்கள் வேதாகமத்தில் கூறப்படாத வகைப்பட்ட ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துப் போதித்து, செயல்படுத்திக்கொண்டுவருகிறார்கள். *வேதாகமரீதியான* ஆவிக்குரிய யுத்தம் கண்டிப்பாக உண்டு. இதையே தான் சீஷர்களை உருவாக்கும் ஊழியர்கள் செயல்படுத்தி, போதிக்க வேண்டும்.

இந்த அத்தியாயத்திலும், அடுத்த அத்தியாயத்திலும் சாத்தா னையும், ஆவிக்குரிய யுத்தத்தையும் குறித்துப் பொதுவாகக் காணப்படும் சில தவறான எண்ணங்களைக் குறித்து நான் குறிப்பிடப் போகிறேன். இது நான் இதைக் குறித்து எழுதிய *சாத்தானையும் ஆவிக்குரிய யுத்தத்தையும் குறித்த நவீன கட்டுக்கதைகள்* என்ற என்னுடைய முழு நூலின் சுருக்கமாகும். இந்த நூலை எங்களுடைய இணையதளத்தில் ஆங்கிலத்தில் வாசிக்க முடியும்.

### கட்டுக்கதை # 1: ‘‘நித்திய காலத்திலிருந்து தேவனும் சாத்தானும் போரிட்டு வருகிறார்கள். இன்றும் அவர்களிடையே போராட்டம் நடந்துவருகிறது.’’

வேதாகமத்தில் தேவனைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கும், மிகவும் அடிப்படையானதும், நன்றாக உறுதிப்படுத்தப்பட்டதுமான சத்தியங்களுக்கு இந்தக் கட்டுக்கதை விரோதமாக இருக்கிறது. தேவன் சர்வவல்லவராக இருக்கிறார்.